229

No. M. 2210. வருஷ சந்தா ரூ. 1-8-0.

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JAGANMOHINI

மலர் VI.] [இதழ் 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV 1929
MADRAS

தனிப் பிரதி அணா 3.

JL
ᵐ211,N229m
N29.6.3.
182854

"...ன்மோகினி" ஆபீஸ்.
...ரடித் தெரு, : : திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்

ஜகன்மோகினி.

இதன் 6-வது ஆண்டு 1928-ஷு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட, ''நவநீத கிருஷ்ணன்'' என்னும் அற்புதமான துப்பறியும் நாவலும் ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1—8—0.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப்பெற்றுக்கொள்ளலாம் பத்திரிகையை வி. பியில் அனுப்புவதால் சந்தாநேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாகுமாதலால் முன்பணம் அனுப்புவதே நலம்.

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குள் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்குதெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்றணு ஸ்டாம்பு அனுப்பினுல்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன் தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

ஸ்ரீமான்-வடூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம் 1,2,3,4	7	8	கும்பகோணம் வக்கீல் 1,2	3	0	வஸந்த மல்லிகா	1	8
மாயாவிநோதப் பரதேசி 1,2	5	0	மேனகா 1,2	3	0	வித்யாஸாகரம்	1	4
மதனகல்யாணி 1,2,3	4	8	பாலாமணி	2	8	திவான் லொடபடசிங் பகதூர்	0	12
			சௌந்தரகோகிலம் 1,2,3	6	0	மாணிக்கவாசகர்	0	8

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி.

உ

ஓம்

ஜகன் மோகினி

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

OF THE REGISTRAR OF ... 23 NOV 1929 ... MADRAS

மலர் VI | விபவ ஷு மாசிமீ February 1929. | இதழ் 3

கடவுள் வணக்கம்

எட்டுமெட்டு மெட்டுமாயோரேழு மேழுமேழுமாய்
எட்டு மூன்று மொன்றுமாகி நின்றவாதிதேவனை
எட்டிணையபேத மோடிறைஞ்சி நின்றவன் பெயர்
எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர்வானமாளவே.

திருமழிசையாழ்வார்.

அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்று
எங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
வெங்கணும் பெரு வழக்கா
யாதினும்வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுளதெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுரு வெளியதாகவும்
கருதியஞ்சலி செய்குவாம்.

தாயுமானவர்.

அநுபவ நீதிசாரம்.

1. உன்னை பிறர் "அபாரமான புத்திசாலி என்றும், மேதாவி என்றும் புகழ்ந்து கூறினாலும், உன் மனத்தில் நீ அவ்விதம் நினைத்துக்கொள்ளக் கூடாது. கடவுளுடைய புகழ்ச்சிக்குப் பாத்திரமாவதைக் கவனத்தில் வைத்து நடந்து கொண்டு அப்புகழை யடைந்தால் மட்டும் உனது ஜன்மம் சாபல்ய மாகும்.

2. துணிகளை வெளுக்க வண்ணன் எப்படி முக்கியமோ அதைப் போல் மனத்தைத் தூய்மையாக ஆக்குவதற்கு அன்பென்னும் வண்ணனும் பக்தி என்னும் உழமண்ணும் முக்கியம்.

3. பிடிவாதம் என்ற குணம் எந்தக் காரியத்திலிருந்தால் ஜெயிக்கலாமென்றால் கடவுளை வழிபட்டுச் சரணம் புகுவதொன்றில்தான் ஜயமடையலாம். மற்றைய விஷயங்களில் ஜயமடைவதாக மனதிற்குத் தோன்றினும் அது உண்மையான ஜெயம் பெற்றதாகமாட்டாது.

4. உண்ணக் கூடிய பதார்த்தங்களில் எதைத் தின்றாலும் நெஞ்சுவரைக்குமே இனிக்கின்றது. கடவுளுடைய நாமாமிருதத்தை இசைத்த சங்கீதத்தை உட்கொண்டாலோ அதன் சுவை ஐம்புலன்கட்கும் ஆனந்தத்தை அளிப்பதுடன் சாதாரண உணவுகள் தேகத்திற்கு பலத்தைக் கொடுப்பது போல, சாந்த குணத்தையும் சத் பக்தியையும் தானே கொடுக்கின்றது.

5. பெற்ற தாய் தந்தையராலும், உடன் பிறந்தவர்களாலும், தன்னை அடைந்த மனைவியினாலும், தான் ஈன்ற மக்களினாலும், அன்பு நிறைந்த சிநேகிதர்களினாலும் அந்தந்தக் காலங்களில் அவ்வப்போது அடையும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லாதது போல் தோன்றுகின்றது. ஆனால் உண்மையானதும் நிரந்தரமானதுமான ஆனந்தத்தை அளிக்கக் கூடிய கடவுளிடத்தில் மனத்தை செலுத்தியபின்னரோ மேற் குறித்த ஆனந்தங்களெல்லாம் ஏதோ ஒரு காற்றடித்துச் சென்றதாகவே தோன்றும்.

6. சிறிய வயதில் தான் செய்யும் துஷ்கிருத்யங்களை யெல்லாம் தாய் தந்தையரால் கண்டிக்கப்படுவதைக் கேட்காமலிருந்து தனக்கு யுக்த வயதும் பகுத்தறிவும் ஏற்பட்ட பின்னர் தன் துஷ்கிருத்தியங்களையும் பெரியோர் சொல் கேளாது பாழாகிவிட்டதையும் எண்ணி வருந்துவதில் பயனில்லை. சிறியவர்களாயினும் பெரியவர்களாயினும் தமக்கு மேற்பட்ட பெரியாரின் மொழிகளை உட்கொண்டு நடந்தால் இம்மை மறுமை இரண்டிலும் சுகத்தை யடையலாம்.

வை. மு. கோ.

182854
M29.6.53

புது சந்தா நேயர்களுக்கு
ஒரு அரிய சந்தர்ப்பம்

நமது புதிய சந்தா நேயர்களில் இதற்கு முன் நமது சஞ்சிகையை பற்றித் தமக்குத் தெரியாததால் சந்தாதாராகச் சேர முடியவில்லை யென்றும், நமது இதர நாவல்களைப் படிக்க வேண்டுமென அவாவுள்ளதென்றும், ராதாமணியைப் பற்றிக் கேள்வியுற்றதில் அதை உடனே படிக்கவேண்டுமென்ற ஆவல் மிகுதியாயுள்ளதென்றும் அதை ஸ்பெஷலாக சஞ்சிகை விலைக்குக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்கிறார்கள். சஞ்சிகையாக அனுப்பியபோது மூன்றணு ஸ்டாம்பு ஒட்டிய புத்தகத்திற்கு இப்பொழுது ஏழுஅணு ஒட்டவேண்டியிருப்பதால் நமக்குச் செலவு அதிகமாகின்றது. ஆயினும் நமது சந்தா நேயர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதே நமது முக்கிய நோக்க மாதலால் கீழ்க் கண்ட ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

அதாவது:—ராதாமணி, கௌரீ முகுந்தன் இரண்டிற்குமாக ரூ. 3/- முன் பண மனுப்புகிறவர்களுக்கு இரண்டு புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும். மேலும், ரூ 8/- முன் பண மனுப்புகிறவர்களுக்கு நமது ஐந்து நாவல்களையும் தபால் செலவின்றி அனுப்புவோம். இந்த விலைக்கு வி. பி. யில் அனுப்பமுடியாது.

100 புத்தகங்களே மேற் குறித்த குறைந்த விலைக்கு கொடுக்க முடியுமாதலால் வேண்டியவர்கள் உடனே முன்பண மனுப்பிப் பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கின்றோம்

மானேஜர்.

பரிசுகளின் விவரம்.

இரண்டாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா. ந.

3921 Mr. N. G. Veerasamy Naidu, Rangoon.

3961 Miss. Navarathna Sabapathy Pillai, Batticaloa.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

குறைந்த விலை! குறைந்த விலை!!

ஒரே மாதம் வரையில்தான் இந்த விலைக்குக் கிடைக்கும்!!

கியாதிபெற்றதும்

இந்தியாவில் ஏராளமாகச் செலவானதுமான

பாக்கெட் டிடக்டிவ்

அல்லது

ஸீ பாக்ராஸ் கோப்



என்னும் நூதன அமெரிக்கக் கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம். இக்கருவியினால் திரும்பிப் பாராமலே உங்கள் பின்னே நடப்பதைத் தெரிந்துக்கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவளறியாமலேயே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இக்கருவி ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டும். இத்துடன் 4—லீலாவினோத பிரஞ்சு போட்டோக்கள் இனாமாக சேர்த்து அனுப்பப்படும்.

ஒரு கருவியின் குறைந்த விலை ரூபா 1—4—0

தி. பான்ஸி வாட்சு அவுஸ்

மிண்ட் பில்டிங்ஸ், மதராஸ்

கவனியுங்கள்! நல்ல லாபம்!!

போடோ ஹாண்டு காமிரா

ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோ பிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{4}$, $2\frac{1}{4}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபா 2—15—0 க்கு கொடுக்கப்படும்.

உடனே எழுதுங்கள்.

கனடியன் வாட்சு பீபிள்

ஜார்ஜ்டவுன், மதராஸ்

உலக அதிசயம்—ரப்பர் கருவிகள் உலக விநோதம்.

உண்மையானது—கீர்த்தி பெற்றது

இக் கருவிகளை உபயோகிப்பதனால் ஒரு கெடுதியும் நேராது. மேல் நாட்டு டாக்டர்களால் புகழ்ப்பெற்ற இக்கருவிகள் இந்தியா, பர்மா, சிலோன், மலாய் தேசங்களில் ஏராளமாக உபயோகிக்கப் படுகிறன. உபயோகிக்கும் முறை கருவியுடன் அனுப்புகிறோம்.

ஆண்களுக்கு ரப்பர் கருவி

இது ஒரு அதிசயமான ரப்பர் குழாய். ஆண்கள் சம்போககாலங்களில் உபயோகிக்க ஸ்பெஷலாக தயார் செய்யப்பட்டது. பெண்களிடமிருந்து நோய்களை வாங்கிக்கொள்ளாமல் தடுப்பதற்கு இதைவிட வேறு வழி கிடையாது. இதை சம்சாரிகளும் உபயோகிக்கலாம். இதனால் கெடுதல் ஒன்றும் கிடையாது.

ஒன்றின் விலை ரூபா 1—0—0

பெண்களுக்கேற்ற கருவி

அடிக்கடி கர்ப்பந் தரிப்பதை தடுக்கவேண்டுமானால் இந்த ரப்பர் கருவியை உபயோகிக்கவேண்டும். இக்கருவி மிகவும் மெல்லியதாகவும், சில்க்நெட், சில்க்டேப் முதலியவைகள் உட்பட விலை ரூ 2—8—0

பிரான்சு தேசத்து

அழகிய படுக்கை அறைப்படங்கள் அடங்கிய ஆல்பம்.

ஸ்பெஷலாக பிரான்சு தேசத்தில் உள்ள அழகிய பெண்களை போட்டோ எடுத்து தயாரிக்கப்பட்டது. பங்களாக்களிலும், படுக்கை அறையிலும் சிங்காரிக்கவேண்டிய படங்கள் இவைகள் தான். விதவிதமான காதல் ஊட்டும் படங்கள் பற்பல மாதிரியாக நடக்கும் காதல் வேடிக்கைகளையும் போட்டோ முகத்திற் காணலாம்.

12-கொண்ட ஒரு ஆல்பம் விலை ரூபா 1—14—0

ஜீனோன் வாட்சு கம்பெனி, மிண்ட் பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்,

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி

சாமான்களின் விபரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா, 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் லைர மோதிரங்கள் 2, ஷெ சாட் பொத்தான்கள் செட் 12; ஷெ கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6, நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1. உயர்ந்த பென்சல்கள் 12. பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1, பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1. ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25, ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ 3—8—0

பி. கே. மூர்த்தி கம்பெனி தபால்பெட்டி 119 மதராஸ்

நூதன
கை தையல் மெஷின்

புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள்; மேஜைத் துணிகள், ஜாக்கெட்டுகள். தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம்.

விலை 1-க்கு ரூபா 4-15-0,

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி,

தபால்பெட்டி 119, மதராஸ்

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூபா 100 இனுமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு வருகிறது. பலர் பல பெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்க மாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10-நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம் போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூபா 2—0—0

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்

இனும்! ரூபா 1,000 இனும்!!

இப்பொழுதைக் காட்டிலும் உங்கள் சரீரம் 15 பவுண்டு எடை அதிகமாக ஆக வேண்மோனல் நீங்கள் செய்யவேண்டிய தேன்ன?

நாடெங்கும் புகழ்பெற்ற ஸ்ரீ கொக்கோக மகரிஷி அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேகியம்

அயக்காந்த செந்தூரத்துடன் சாப்பிடுங்கள்

பலஹீனம், மறதி, கைகால் ஒய்ச்சல் மயக்கம் தூக்கமின்மை, ரத்தம் குறைவு, மலபந்தம், இந்திரிய ஸ்கலிதம், வெட்டை, காசம், நீரிழிவு, பாரிச வாதம் முதலிய நோய்களை நிவர்த்தி செய்வதோடு, பசி தீபனத்தையும் தாது புஷ்டியையும் உண்டுபண்ணுவதில் நிகரற்றது. சிற்றின்பத்தில் அதிகமாகபற்று உடையவர்கள் இதைச் சாப்பிடவேண்டியது நிரம்பவும் அவசியமாகும். ஒரு மண்டலம் என்னும் 48 நாட்கள் சாப்பிட்டால் 15 பவுண்டு எடை உங்கள் தேகம் வலுக்கும். இதற்கு உத்தரவாதம். இது உண்மையல்லவென்று எவரேனும் நிரூபித்தால் ரூபா 1,000 ஈடுகொடுக்கத் தயாராயிருக்கிறோம். மூளை உழைப்புமுள்ள ஒவ்வொருவருக்கும் இது இன்றியமையாதது. வீணில் வெள்ளையர் மருந்தில் ஏமாறாதிர்கள். இந்த உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதத்தை உண்டு, பிறகு உண்மையாக உங்களுடைய அபிப்பிராயத்தை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

ஒரு மண்டலமென்னும் 48 நாள் சாப்பிடும்படியான அசல் சிந்தாமணி லேகிய அயக்காந்தம் செந்தூரம் டின் 1-க்கு ரூபா 5—0—0

தபால் செலவு வேறு. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபால் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

100 இரகசிய முறைகள் கொண்ட அருமையான நூல்
வெளிவந்துவிட்டது!!!

கைத்தொழில் முறைகள்

இந்நூலில் மாதம் 100 ரூபா முதல் 500 ரூபா வரை சம்பாதிக்கக் கூடிய அரிய போதனைகள் அடங்கியிருக்கின்றன.

இதில் பலவிதமான சோப்புகள், மெழுகு வர்த்திகள், சாக்குகள், பாண வேடிக்கைகள், வார்னிஷ்கள், தீக்குச்சி, இங்கிகள், சாயங்கள், வெள்ளி, தங்கம், மாஜிக் இங்கி, ரப்பர் ஸ்டாம்பு இங்கி, வர்ண தினுசுகள், பெப்பர்மிண்டு தினுசுகள், ஓமம் வாட்டர், பலவித பல்பொடி, பிஸ்கத்துகள், கேக்குகள், கூந்தல் தைலங்கள், அத்தர் செண்டு தினுசுகள், வாஸலயின், பன்னீர், ஷர்பத்துகள், ஷிரப்புகள், பூட் பாலிஷ், அரக்குகள், சோடா, லெமனேட், ஐஸ்ஜலஸ் பவுடர்கள், லேகியம் முதலிய பலவித மருந்து தினுசுகள், கறிமசாலை பவுடர், பென்சல்கள், மூக்குத்தூள், சிகரெட்டுகள் முதலிய அநேக செய்முறைகள் பிரபல அனுபவசாலிகளால் எழுதப் பட்டிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடும் இக்காலத்தில் இந்நூலானது ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியதொன்றாகும். இந்த நூலில் சொல்லியில்லாத கைத்தொழில் ஒன்றுமே கிடையாது.

முக்கிய குறிப்பு:—இவ்விளம்பரத்தில் சொல்லியிருப்பதைப் போல் புஸ்தகம் எந்த அம்சத்திலாவது மாறுபட்டிருக்கும் பட்சத்தில் எந்தக் காலத்திலும் உங்கள் பணம் வாபீஸ் செய்யப்படும்.

300 பக்கங்களுக்கு மேற்கொண்ட
கைக்கு அழகான பெரிய நூல்
ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது } விலை ரூ 1-8-0

உடனே எழுதுங்கள்.

வாஹன் புஸ்தக சாலை,

244. தங்கசாலை வீதி, மதராஸ்.

டெலிபோன்; நெ. 3311.

தந்தி விலாஸம் "விகடன்"

5. வது அதிகாரம்.

சந்தர்ப்ப புத்தியே சான்ற பெருந்துணை

ஏற்கனவே தான் கரை கடந்த கவலையுடன்நடுங்கிக் கொண்டிருந்த தருணம் எதிர் பாராத விதமாகத் தன் காதலனைக் கமிஷனர் அழைக்க, அவர் சென்ற உடனே தன் வீட்டிலே கள்ளர் புகுந்து விட்டதைக் கண்ட நமது சிரோமணியாகிய நவநீதத்தின் உயிர் துடிக்கின்றது. "விபரீதமான இந்தப் பேராபத்திலிருந்து நான் எவ்விதம் தப்புவேன்? எனக்கு இத்தருணம் மறைந்து காக்கும் கடவுளைத் தவிர எதிரில் நின்று பேசக் கூடிய மனிதத் துணை என்பதே கிடையாதே! பரமசங்கடமான நிலைமையில் சிக்கிக் கொண்டேனே! என்ன செய்வேன்! ஏ! கருணாகரனே! கமலாயதாக்ஷி! இவ்வாபத்துக் காலத்தில் உங்களை யன்றி

வேறெவரே நீவே கதி வேமாருலகு ஸீதாபதி!
ஈரேலோகமுலகாதாருடகு நின்னுவினா!—வே

என்னப்பனே! திடீரென்று புகுந்துள்ள கள்ளர்களின் கூட்டத்து மத்தியிலகப்பட்டுக் கொண்டிருக்கிற நான் எவ்விதம் தப்புவேன்? ஆலைவாய்க் கரும்புபோலானேனே!என்னப்பனே! சர்வலோக சரண்யா! தீனதயாளா! நித்ய கல்யாணி! அம்பிகே! பராசக்தி! என்னை இந்த ஆபத்திலிருந்து நீக்கக்கிருபை செய்ய மாட்டீர்களா? என்ன செய்வேன்?" என்று தனக்குள் துடிக்கின்றாள்; தவிக்கின்றாள்; அவ்வறையைச் சுற்றிச் சுற்றி வருகின்றாள். அங்கு மாட்டப் பட்டிருக்கும் படங்களை யெல்லாம் விழுந்து விழுந்து வணங்கித் துதிக்கின்றாள். நிமிடம் ஏற ஏற இவளுடைய மனத்தில் தாங்க இயலாத பரமஹிம்சை மேன் மேலும் உண்டாகின்றது. "ஐயோ! நாம் இத்தருணம் என்ன செய்வோம்? எவ்விதம் கள்ளரிடமிருந்து தப்புவோம்?" என்ற நடுக்கத்துடன் தன்னையே மறந்து "என்னப்பனே! ஜகதீசா! இவ்வேழை ஆபத்தான இவ் வேளையில் கதறும் சப்தம் உனது

ஈராறு காதிலே நான் சொன்ன மொழியேலாம்
எள்ளளவும் கேட்க விலேயோ

இக்கலியுகத்திலே பற்பல சிரியிலே
என்னென்ன புதுமை செய்தாய்

பாருலகில் பெரியமெய்ஞ் ஞானபண்டிதனேவுன்
பன்னிருக ணில்லேயோ சொல்

பாவையர்கள் மோகமாய் அருணகிரி செந் தமிழ்ப்
பாட்டுமேல் நினை வுற்றவா

தீரனே பொற்கடக மணியுமணி மார்பனே
தேவர்பணி பொற்பாதனே

செட்டி மகனே திலகக் கட்டிமணியே யிந்த
தேந்தினம் செய்யலாமோ

தீர கெம்பீர ஒய்யார செந்தூர செஞ்
சேவற் கொடிக்கதிபனே

தேவர்சிறை மீட்டருள் செய் செல்வனே காத்தருள்
தேன்பரங்கிரி வேலனே

எனது பாபமெல்லாம் திரண்டு உனது காதில் கேட்க வொட்டாது தடுத்து விட்டனவோ?'' என்று மெய் மறந்து தேகம் சிலிர்த்து கண்ணீர் சோர,வெயர்வையரும்ப, வெளியில் கள்ளரிருக்கையில் சத்தமிடுகின்றோமே என்பதையும் மறந்து சத்தமிட்டுப் பாடித் தேம்பித் தேம்பியழுகின்றாள்.

வெளியில் நிற்கும் தடியர்கள் மெல்ல எல்லாவிடங்களேயும் பார்த்துக் கொண்டே வருகையில் நவநீதம் பாடிய இன்னொலியைக் கேட்டு அக் கள்ளர்களே மதிமயங்கி ஒருவரோடொருவர் "அடேய் அண்ணன்மாரே! அந்தப் பொம்பளே இந்த அறெலெ இக்கராடா! அவ உள்ளவே ஏதோ கதை படிக்கிறாப் போலெ இருக்குதடா! ஆ! அந்தப் பொம்ளெயொடெ கொரலு என்ன வழங்குதடா! நாம்ப வந்த சேதியே அறியாமயே அவ

தமாஷா ஏதோ பேசராடா! அடேய்! ஈராறு காதிலேண்ணு இன்னும் என்னமோ சொல்ராடா! அதெ கேப்போம் சொம்மாரீங்கடா!'' என்று கூறியவாறு கதவடியில் எல்லோரும் வரிசையாக நின்று விட்டார்கள். நவநீதமும் அப்பாடலைப் பாடி முடித்ததும் என்ன செய்வதென்பதை யறியாது சற்றுத் தயங்கியவாறு யோசனை செய்தாள். மீண்டும் கதவின் இடுக்கினுல் உற்றுக் கவனித்தாள். கள்ளர்கள் வரிசையாகக் கதவடியில் நிற்பதைக் கண்டாள். அவளுடைய குலை நடுக்கம் இன்னுமதிகரித்து விட்டது; எனினும் அவர்கள் நிற்கும் மாதிரியைக் கவனித்ததில் இவள் பாடிய பாடலைக் கேட்டு மயங்கி நிற்பதாக அறிந்து கொண்டாள். அவ்விதம் அறிந்த உடனே அவளுக்கொரு புதிய யோசனை தோன்றியது. அதாவது இக் கள்ளர்களுக்கும் சங்கீதத்தினிடத்தில் தம்மையறியாத விதமாக ஓர் ஞானமிருப்பதாகத் தெரிகிறது; அதனுலே தான் அவர்கள் ஒருவிதமான ஆநந்தத் தோற்றத்துடன் நிற்கிறுர்கள். ஆகா! சங்கீதத்தின் மகிமையை என்னென்று கூறுவது? கேவலம் மவுட்டீகத் தன்மையாயும் துராக்ருதமாயும் அஞ்சாநெஞ்சைப் படைத்து அநியாயத் தொழிலையே புரியும் கள்ளர்களுக்கும் சங்கீதத்தினிடத்தில் ஒருவிதமான மதிப்பும் ப்ரியமும் உணர்ச்சியும் தோன்றுகின்றன. என்ன ஆச்சரியம்! பசு பக்ஷி ஜாதிகளும் பரமாநந்தமாகக் கேட்டு ஆனந்திக்கும் அச்சங்கீதத்தின் அபார சக்தியை என்னென்று கூறுவது! சங்கீதத்தின் மோகத்தினுல் தாம் தீத் தொழில் புரிய வந்ததையும் சிறிது மறந்து ஆநந்த பரிதராக நிற்கும் விசித்திரமும் அப்பரமனின் செய்கை தான். 'இவர்களைச் சங்கீதத்தின் மூலமாகவே மயக்கி நீ தப்பித்துக் கொள்வாய்' என்கிற உன்னதமான மார்க்கத்தை அக்கருணுமூர்த்தி காட்டியருள் புரிகிறுர் போலும். ஆகா! இதுவும் ஓர் வகையான உபாயந்தான். இன்னும் சிறிது நேரம் பாடிக் கொண்டிருந்து நமது நாதன் வரும் பரியந்தம் அவர்களை மயக்கத்திலாழ்த்தி விடுவோம். பின்னர் கடவுள் விட்ட வழியாகட்டும்'' என்று தீர்மானித்தவளாய்ப் பின்னும் தாமதமின்றி உரத்த குரலால் அக்ஷரங்களை ஸ்பஷ்டமாக விளங்கும் படிக்கும், கேட்போர் மனம் பரவசப்படும் படியாயும் தனது முழுவல்லமையையும் உபயோகித்து இனிமையாகப் பாடத் தொடங்கினுள்.

ஆநந்தக்களிப்பு மெட்டு

மோகன ராகம்.

1. தொண்டாருந்தும் மருந்து—பெரும்
தூயர்க்கும் நேயர்க்கும் தோன்று மருந்து,
அண்டருங் காணு மருந்து—அரன்
ஆநந்தத் தாண்டவங் காட்டு மருந்து

2. பற்றை யொழிக்கு மருந்து—பவ
பந்தந் தொலைக்கும் பழைய மருந்து
நற்றவர் நாடு மருந்து—நல்ல
ஞானமும் போகமும் நல்கும் மருந்து.

3. உண்ணத் தெவிட்டா மருந்து—புறக்
கண்ணிற்குங் காட்சி கொடுக்கு மருந்து,—
எண்ணில் இனிக்கு மருந்து—என்னுள்
என்றும் இருந்தொளி வீசும் மருந்து

4. கருணாரசமாம் மருந்து—தன்னைக்
கருதிடபாவங்கள் போக்கும் மருந்து,—
ச்ரவணாநந்த மருந்து—நாளும்
சிந்தித்திடில் பலனீயும் மருந்து

5. வாகனத் தேறும் மருந்து—மங்கை
பாகனும் போற்றிப் பணியுமருந்து
சாகரவாச மருந்து—உயர்
ஆகமவேத புராண மருந்து

காம்போதி

6. தேரோட்டி நின்ற மருந்து—அதி
பார்புகழ்கீதை பகர்ந்த மருந்து
கூர்விழிகொண்ட மருந்து—பெருங்
குன்றை எடுத்துயிர் காத்தமருந்து.

7. ஸகஸ்திர நாமமருந்து—என்றும்
ஜாதிகள் பாராத சமத்வமருந்து
ஜகமெல்லாம் போற்றும் மருந்து—எமக்கு
இக பரமிரண்டிற்கும் ஏற்றமருந்து

8. ஞானக் கண்ணான மருந்து—அதி
ஞாலத்தவர்க்காகும் நல்ல மருந்து.

த்யானத்திற்கேற்ற மருந்து—அது
தீனரை ரக்ஷிக்கும் திவ்ய மருந்து.

9. ஆதியந்தமில் மருந்து—அதன்
பாதம் பணிவோரைப் பேணும் மருந்து,
சீதா நாமமருந்து—உண்ணச்
சீரும் சிறப்பும் அளிக்கும் மருந்து.

10. கைப்பாகத்தாகா மருந்து—தானே
மெய்ப்பாகமான சுயம்பு மருந்து
தப்பாத வன்மை மருந்து—நூலில்
செப்பாத வாகடத்தூய மருந்து.

சாவேரி

11. இச்சகம் போற்றும் மருந்து—எழில்
பச்சைமாமேனி படைத்த மருந்து
மச்சாவதார மருந்து—எங்கும்
அர்ச்சாவதாரத் தொளிரும் மருந்து

12. ஆமைபோல் வந்த மருந்து—அது
பூமியை மீட்டுக் கொடுத்த மருந்து
வாம வராக மருந்து—யாரும்
தாமோதரா வெனத் தாழும் மருந்து

13. அரக்கனை யழித்த மருந்து—பக்தன்
பிரகலாதனழைத்திட வந்த மருந்து
மரக்கம்பத் துதித்த மருந்து—யாரும்
நரசிங்க வென்றேத்து நாமமருந்து

14. வாமன மாயமருந்து—நெடும்
பூமியும் வானையும் போர்த்தமருந்து
சாமளரூப மருந்து—போற்றும்
பாமரமக்களைக் காக்கும் மருந்து

15. வில்லை வளைத்த மருந்து— தெய்வ
மெல்லியல் சீதைக் குகந்த மருந்து
சொல்லவரிதாம் மருந்து—தந்தை
சொற் பரிபாலித்த சுகுணமருந்து

கல்யாணி

16. ஆடை வளர்த்த மருந்து—அன்னப்
பேடு த்ரௌபதி விளித்த மருந்து
ஈடுயர்வற்ற மருந்து—தனிப்
பீடேன் எங்கும் பிறங்கும் மருந்து

17. தேவர்கள் போற்றும் மருந்து—திருப்
பாவையை மார்பினில் கொண்ட மருந்து
பூவிதழ்ப் பாதமருந்து—ஜகம்
யாவையும் குட்சியில் வைத்த மருந்து

18. பாகத்தில் சிறந்த மருந்து—ஜகன்
மோகினி ரூபமும் கொண்ட மருந்து
நாகசயன மருந்து—க்ரூரக்
காகத்தின் கண்ணைப் பெயர்த்த மருந்து

19. பாண்டவநேய மருந்து—தன்னை
வேண்டியவர்களைக் காக்கும் மருந்து
காண்டற்கரிய மருந்து—எழிற்
தாண்டவங்காட்டுந் தனித்த மருந்து

20. ஆனிரை மேய்க்கும் மருந்து—கூனி
கூனை நிமிர்த்த குணமா மருந்து
மானிலம் போற்றும் மருந்து—எங்கும்
தானாகி நின்ற தயாள மருந்து

என்று வெகு ரம்மியமாய்ப் பாடுவதைவெளியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கள்ளர்கள் உண்மையிலேயே தேகம் பரவசமடைந்து "ஆகாகா! அடேய்! அண்ணன்மார்களே! என்னமோ மருந்து சொல்ர அழவே பாருடா! ஒரு ஜொரம், குளிரு, பேதி, வாந்தி, இருமல் இதுக்கல்லாம் மருந்து படிக்கராளாங் காட்டியுமுண்ணு பாத்தேன். யம்மாடீ! அவ என்னென்ன மோல்லாம் படிக்கராப்பா! உண்ணத் தெவுட்டாத மருந்தாம்! தேரு ஓட்ட மருந்தாம். க்யானக் கண்ணு மருந்தாம். என்னமோ அவுதாரம் பத்து அவுதாரம் அந்த ஈஷ்பரனுக்குச் சொல்ராங்களே அதாம் மீனு, ஆமை, பன்னி, ஷிம்மம், குள்ளன், ராமன், கிருஷ்ணன் இன்னு

பத்து அவதாரம் எடுத்தாங்களாமே! அதெல்லாம் இந்த கதெலெ வச்சி பாட்ராடா! பாண்டவருக்குச் சிநேகிதமாம் யப்பாடா! என்னென்னமோ நொம்ப நொம்ப அழவா பாட்ராடா! ஆமாண்டா! அந்த பொம்பளேபாட்ரதே அயவாக்கிதா! அந்தப் பாட்டு அயவாக்கிதாடா சொல்டா பாக்கலாம்" என்று ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டே நவநீதம் பாடுவதை வெகு ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இது பரியந்தம் நின்று கொண்டிருந்த கள்ளர்களெல்லாம் வரிசையாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நவநீதம் தான் எடுத்த பாடலை ராகமாலிகையைப் போல வெவ்வேறு இராகங்களில் பாடி இடை இடையே ராக ஆலாபனமும் செய்து கால தாமதமாக்க வேண்டும் என்றே பாடி முடித்தாள். அப்போதும் அவள் ப்ராணநாதன் வரவில்லை. பின்னும் கதவின் இடுக்கினால் அவள்பார்த்தாள். கள்வர்களெல்லாரும் வரிசையாக உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். "ஆ! இனி நாம் எவ்விதம் தப்பக் கூடும்? நமது ப்ராணபதி இன்னும் வந்து சேரவில்லையே!" என்று வருந்திக் கொண்டே இருக்கையில் அக் கள்ளர்களில் ஒரு தடித்த மனிதன் மற்றவர்களை நோக்கிச் சற்று மெல்லிய குரலால் பேசத் தொடங்கி "ஏண்டா! அண்ணன்மார்களே! இதென்ன மதி மோசம் பூட்டோமே! அந்த பொம்பளேயே லேசான வண்ணு நெனக்காதே; அவ நாம்ப வந்திட்டதெபாத்துக் கிணுதான் மொள்ள தமாஷாகதே பாடிக்கிணே நம்மெ வச்சிப் புடபாக்கராப் போலெ இக்குது. அந்த ரகசியம் தெரிஞ்சி போச்சி! எப்படிண்ணு! அதோ பாரு கதவு சந்தாலே பாக்கர மாதிரி தெரியுதுடா! சரி: சரி. நாம்ப வந்த வேலெயே மறந்து பூட்டிங்களோ? எஜமானன் அவளெ ஜல்தியா கொண்டாரச் சொல்லிச் சொன்னதெ மறந்துட்டீங்களோ! எயுந்து கதவெ ஒடியுங்கடா! சும்மா கானம் தெரிஞ்சு பூட்டாப் பலே! கதேகேக்கிரிங்க. அப்பாலே ஏதாச்சும் ஒவித்ரியம் வந்திடிச்சிண்ணு இண்ணுசேயர்து? கொஞ்சங் கூட புத்தியில்லாமெ கடக்கிரிங்க. எயுந்திருங்கய்யா!" என்று கூறிய வார்த்தைகள் நமது நவநீதத்தின் செவியில் பட்டது தான் தாமதம் அவள் நெருப்பை மிதித்தவள் போலத்துள்ளுகிறாள்.

அவளுக்கு மூச்சே நின்றுவிடும் போலான பரம வேதனை உண்டாகிறது. ஆ! எந்த நிமிடம்கதவை ஓரேஉடைப்பில் உடைத்துக் கொண்டு உள்ளே வந்துவிடுவார்களோ! ஐயோ! கடவுளே! அவர்கள் கொள்ளையிட வந்திருப்பதிலும் என்னையே கொள்ளையிட வல்லவா துணிந்து வந்துவிட்டார்கள்! ஆ! அந்த ரகஸியமும் தெரிந்து விட்டதே! என்ன செய்வது.? ஹா! ஈசா! இத்தருணம் நீ நிம்மதியாக நித்திரையா செய்கின்றாய்? உனது பத்தினியுடன் உல்லாசமாகத் துயிலும் ஆநந்தத்தில் உன்னை நம்பிய அடியார் களின் இடர்களைக் கொய்வதையும், இடர் உற்றதென்பதை அறிவ தையுமா மறந்து விட்டாய்? ஏ கருணாசாகரா! சாகர மென்பது கரைகாணாத தென்பதைக் கண் கூடாகக் காண்கிறோம். அதே போல் கருணையையே ஓர் சாகரமாகக் கொண்டுள்ள நீ தற்போது அச் சாகரத்தில் ஒரு துளி எனக்கு அளித்து ஆதரிக்கமாட்டாயா! ஐயோ! எனது சொத்து முழுவதையும் கேட்பினும் யான் அளிக்கத் தயாராக இருக்கின்றேனே! பாவிகள் அவைகளைச் சற்றும் எதிர் நோக்காது என்னையே வேண்டி யல்லவா வந்திருக்கின்றார்கள்! ஐயோ! என் இன்னுயிர்க் காதலரை இச் சமயத்தில் பிரித்து வைத்ததுவும் ஒரு விளையாட்டா? அவ்விதம் தான் பிரித்தனையே! அடுத்த க்ஷணத் தில் நேர விருக்கும் ஆபத்தைத் தீர்த்து ரக்ஷிக்க ஓர் மார்க்கத்தைக் காட்டமாட்டாயா? என் காதலரை வருவிக்கமாட்டாயா? ஏ! கருணை வல்லி! கமலலோசனி! நீயுமா இச் சமயம் மறந்து நித்திரை செய் கிறாய்! உன் குழந்தை யழுவது உன் செவிக்கு எட்டாமற் போகுமோ? உலகத்திலுள்ள மக்களை எல்லாம் ஈன்று அவர்களின் அநாதரவைக் கவனியாது துயில்வது உனது கருணைக் கழகாமோ! என்னம்மணி! வனஜலோசனி!" என்று தனக்குள் வேண்டிக் கொண்டிருக்கையில் கதவை யிடிப்பது போலான ஓசை யுண்டாகி யதைக் கவனித்துத் துடிக்கின்றாள். எந்த வழியில் இனி தப்பலாம் என்று யோசனை செய்கிறாள். சத்தமிட்டுக் கத்த லாமோ என்று பார்க்கிறாள்.

அங்ஙனம் செய்தால் கள்ளர்கள் கதவை யுடைத்துக் கொண்டு உள்ளே வந்து வாயில் துணியை அடைத்து இம்சை

செய்து எடுத்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? மேலும்அவ்விதம் கத்துவதால் அண்டையயலில் நெருங்கிய வீடுகள் இருந்தாலல்லவோ அதனுல் பயன் படும்! இந்தப் பங்களாவோ தனித்த ஓர் ஒதுக்குப் புறமாய் இருக்கிறது! என்ன செய்வேன்?" என்று கட்டுமீறிய கலக்கத்துடன் பதுமை போல் நின்று யோசனை செய்தாள். அவ்வமயம் திடீரென்று ஓர் யோசனை அவளுக்குத் தோன்றியது; உடனே கடவுளை விழுந்து வணங்கினுள். சரே லென்று தன் பெட்டியைத் திறந்து ஓர் அழுக்குப் படிந்த மட்டக் காகிதத்தை எடுத்து அதில் காபிங்கு பென்ஸலால் ஏதோ கோணல் மாணலாக எழுதி மடித்து உறையிட்டு அதை மற்ருேர் பெட்டியில் வைத்துவிட்டாள்.

இதற்குள் கதவைப் பலமாக டம் டம் என்று கள்ளர் இடிப் பதைக்கவனித்த நவநீதம் முகத்தில் புன்னகை பூத்த வண்ணம் ஏன் கதவை இடித்துக் கஷ்டப்படுகிறீர்கள்? இதோ கதவைத் திறந்து விட்டேன்; கவலைப் படவேண்டாம்!" என்று கூறியபடியே கதவைச் சடார் என்று திறந்துகொண்டு வெளியில் வந்து எல்லோரையும் ஒரு முறை மலர்ந்த முகத்துடன் நோக்கி, "ஆகா! என் அண்ணன் மார்களே! எப்போது வந்தீர்கள்? எத்தனை நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்? அப்பொழுதே என்னை யழைத் திருக்கலாகாதா!" என்று கூறியவாறு அவர்கள் நிற்கும் ஒவ்வொரு இடத்திலும் கடவுள் பத்தவதாரத்துடன் நிற்பதாக மனத்திஞற் நிர்மாணம் செய்துகொண்டு கடவுளை மனமாரத் துதித்துக் கொண்டே அவர்களை யெல்லாம் வணங்கி எழுந்து வெகு இனிமை யான குரலால் பேசத் தொடங்கி "அண்ணன்மார்களே! இப்படி உட்காருங்கள்; நிற்கவேண்டாம். எல்லோரும் சௌக்யமா! அண்ணிகள், குழந்தைகள் எல்லோரும் சுகந்தானே! என்னை யொரு பொருட்டாக எண்ணிப் பிரீதியுடன் தாங்கள் எல்லோரும் வந்ததற் காக யான் மிகவும் சந்தோஷ மடைந்து வந்தனம் செய்கிறேன்." என்று அபாரமாய் விசாரித்து நமஸ்கரித்ததையும், தாம் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் அண்ணன் முறை காட்டி வெகு வாஞ்சையுடன் பேசுவதையும் கண்ட கள்ளர்களுக்கு ஒன்றுமே

தோன்றவில்லை. அவர்கள் ஆச்சரியமயமாய் மாறிப் போய்த் தம் பித்துவிட்டார்கள்; இவளுக்கு என்ன விதமாகப் பதிலளிப்பது என்பதையே மறந்து ப்ரமை கொண்டவர்களைப் போல நின்று விட்டார்கள்.

இதற்குள் நவநீதம் சரேலென்று சமையல் உள்ளே சென்று அன்று தான் செய்து வைத்திருந்த திரட்டுப் பால், முருக்கு, மைசூர் பாகு முதலிய பக்ஷணங்களை ஒரு தட்டில் வைத்துக் கொணர்ந்து ஒவ்வொரு குலைகளில் அப்பக்ஷணங்களை நிரப்பி அவர்களுக்கு முன்னால் வைத்து, "அண்ணன்மார்களே! உங்களுடைய வருகையால் என் மனம் பூரிக்கின்றது. இப்பொழுது அகால மாகையினால் மற்ற எதுவும் கொடுக்க அசக்தையாக இருக்கிறேன். தயவு செய்து இந்தச் சிற்றுண்டிகளையேனும் புசித்து என்னை மகிழ்விக்கக் கோருகிறேன். வித்யாசமாக எண்ணிச் சங்கோஜப் பட வேண்டாம்! நானும் உங்களுடைய சொந்தத் தங்கை தான். பேதமின்றிச் சாப்பிடுங்கள்" என்று வெகு வாஞ்சையுடனும் தேன் ஒழுகும் தீங்கனிச்சுவையைப் போன்றும் மொழிந்த வண்ணம் சயன அறைக்குச் சென்று ஒரு கூடை நிறைய வைத்திருந்த கமலாப் பழம், ஆப்பில், பச்சை திராக்ஷைப் பழம், பேயன் வாழைப்பழம் முதலிய பழங்களையும் கொணர்ந்து முறையே எல்லா இலைகளிலும் வைத்துப் பின்னும் அவர்களை நோக்கி, "ஆகா! அண்ணன் மார்களே! என்ன இது! ஏதோயோசனை பலமாகச் செய்வது போலத் தோற்றுகின்றதே! நான் கூறுவதும் செய்வதும் உங்களுக்கு வியப்பாகத் தோன்றுகின்றனவா? உங்களுடைய முகக் குறியை நோக்கின் அவ்விதந்தான் எனக்குத் தோன்றுகின்றது. தாங்கள் அவ்விதம் சிறிதும் சந்தேகம் கொள்ளவேண்டாம். நீங்கள் நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ளாதிருந்தால் கூறுகிறேன்; கேளுங்கள். இன்னும் அத்தாக்ஷியும் காட்டுகிறேன்.

அதாவது:—எங்களுடைய முப்பாட்டன் தலைமுறையாக எங்கள் ஜனன பூமி திருநெல்வேலி என்ற ஊராகும். அந்த ஊரில் பெயர் பெற்ற வீரண்ணன் வகுப்பாரைக் கேள்விப்படாதார் கிடையாது. அவர்களைப் போல நற்குணமுடையவர் யாரு

யில்லை. நல்லாருக்கு நல்லாரே யாவர்; பொல்லாருக்குப் பொல்லாரே யாவர். அந்த வகுப்பினரில் ஒருவரான உத்தமர் எங்கள் முப்பாட்டனருக்கு மிகவும் வேண்டியவர். அவர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவதும் எங்கள் வீட்டார் அவ்விடம் செல்வதும் வழக்க முண்டு. அதிகமான சினேக வாஞ்சையால் என் பாட்டனர் அவர்களுடைய பெண்ணை எங்கள் வீட்டிலிருந்த அவர்கள் ஜாதியையே சேர்ந்த குமாஸ்தாவுக்கு விவாகம் செய்து வைத்தார். என் பிதாவும் அவர்களும் அண்ணன் தம்பி முறையிலேயே பழகியவர்கள். அவர்கள் வீட்டு ஆடவரும் பெண்டிரும் எங்கள் வீட்டு ஆடவரும் பெண்டிரும் அக்கா தங்கை போலவும் அண்ணன் தங்கை போலவுமே முறை வைத்துக்கொண்டு பேசுவது வழக்கம். இப்போதும் நாங்கள் அவர்களிடம் அவ்விதம் தான் பழகுகிறோம். எங்களுடைய தலைமுறை தலைமுறையாகவும், இன்னும் தலைமுறை தலைமுறையிலும் கள்ளர் பயம் என்பதே எங்கள் பரம்பரையிலும் கிடையாது; இனிமேலும் நேராது. அவ்விதம் யாரேனும் எங்களுடைய வர்க்கத்தினரின் வீட்டிற்குள் புகுந்துவிட்ட செய்தியை எங்கள் அண்ணன்மார்கள் அறிந்தால் அவர்களைப் பொடி சூரணமாக ஆக்கி விடுவது வழக்கம். இனியும் அவ்விதமே செய்துவிடுவதாக எங்களுக்கு உறுதிச் சீட்டெழுதி எங்களுடைய ஒவ்வொரு குடும்பத்தவரிடமும் தனித் தனியாகக் கொடுத்திருக்கிறார்கள்.

அவர்களுடைய வம்சத்தவர்களைப் போலவே எங்களுடைய வம்சத்தவர்களையும் அவர்கள் நினைத்துவிட்டார்கள். ஆதலால்தான் நான் அவர்களை யழைப்பது போலவே உங்களையும் அழைத்தேன். உங்களில் யாருக்கேனும் படிக்கத் தெரிந்தால் இதோ அந்த உறுதிச் சீட்டைக் காண்பிக்கின்றேன்; அதைப் படித்துப் பாருங்கள். பிறகு உங்களுக்கு நம்பிக்கை யுண்டாகும். அண்ணன்மார்களே! எனது அவ்வண்ணன்மார்களில் ஒருவருடைய தாயார் நேற்று இவ் ஊருக்கு ஏதோ காரியமாக வந்தார்களாம். அப்போது என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் வாங்கிக்கொண்டுவந்த கனிகள் தான் இவைகள். அவற்றையே உங்களுக்கு அளித்தேன்."

என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று கடவுளை வணங்கித் தான் முன்னர் எழுதிவைத்த கடிதத்தைக் கொணர்ந்து அவர்களின் முன்னால் நீட்டினாள்.

நவநீதம் முதலில் செய்த உபசாரத்தைக் கண்டே ப்ரமித்து விட்ட கள்ளர்களுக்கு இவள் எடுத்துரைத்த விஷயங்கள் வியப்பின் மேல் வியப்பைத்தந்தன. நவநீதம் கூறியபடியே வீரண்ணன் வகுப்பார் இருப்பது உண்மை என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள் மேலும் அவர்கள் தமக்கு முக்கியமாக வேண்டியவர்களிடத்தில் வெகு ப்ரீதியாகத் தமது குடும்பத்தைப் போலவே எண்ணி இருப்பதுவும் இவர்கள் கேள்வியுற்றிருக்கிறார்கள். ஆதலால் இவள் கூறியதைக் கேட்டதும் இன்னதென்று கூற வியலாத பேராச்சரியத்தை யடைந்து அவள் கூறியது முற்றிலும் உண்மை என்றே நம்பியும் விட்டார்கள். அதோடு அவள் பேசுகின்ற நயமும் தங்கள்பால் காட்டுகின்ற பக்ஷமும் அவர்களுடைய மனத்தில் ஓர் விதமான இரக்கத்தை யுண்டாக்கி நவநீதத்திற்கு ஒருவிதமான தீங்கும் செய்யலாகாதென்ற ஓர் நூதன உணர்ச்சியையும் தந்து போராடுகின்றன. இந்தநிலையில் அவர்கள் எதுவும் பேசமாட்டாது விழிக்கையில் நவநீதம் கடிதத்தை நீட்டினாள்.

அவர்களுள் ஒருவனைத் தவிர மற்றவர்களுக்குச் சிறிதும் படிக்கத் தெரியாது. ஒருவனுக்கு மட்டும் தட்டித் தடுமாறிப் படிக்க ஒரு சிறிது தெரிந்திருந்தது. நவநீதம் கடிதத்தைக் காட்டி "அன்புடைய அண்ணன்மார்களே! உங்களில் யாருக்குப் படிக்கத் தெரியுமோ அவர்கள் இதைப் படித்து மற்றையோருக்குக் கூறுங்கள். இல்லையேல் என்னையே படிக்கச் சொன்னால் யானே படித்துக் காட்டுகிறேன்." என்று வெகு விநயமாகக் கூறினாள்.

இதைக் கேட்ட கள்ளர்களில் படிக்கத் தெரிந்தவன் அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டு மின்சார விளக்கருகில் சென்று தட்டித் திணறிப் பின் வருமாறு படிக்கத் தொடங்கினான்.

"அன்பு மிகுந்த சகோதரிக்கு வீரண்ணன் எழுதும் உறுதிச் சீட்டு யாதெனில்:—உங்களுடைய தலைமுறை தலை

முறைக்கும் கள்ளரால் பயம் என்பதே கொள்ளவேண்டாம். அவ்விதம் யாராலேனும் உங்களுக்கு ஏதேனும் ஆபத்தோ பொருள் நஷ்டமோ ஏற்படுமானல் அவ்விதம் செய்தவர்களின் குடலை நீங்கள் காணும்படிச் செய்ய நாங்கள் என்றும் எங்கள் பரம் பரையாகத் தயாராக இருக்கிறோம். ஆதலால் சகோதரியே! உங்கள் மரபிலேனும் உங்களுடைய சினேகிதர்களின் மரபிலேனும் கள்ள ரைப் பற்றிய பயம் ஒரு சிறிதும் கொள்ளவேண்டாம். இது உறுதியான மொழி; கடவுள்மீது ஆணையாக நம்பலாம்.

இங்ஙனம்
உனது சகோதரன்
வீரண்ணன்

அதை அவன் படிக்கும்போதே அவனுடைய குடலும் நடுங்கியது. கேட்கும் மற்ற கள்ளர்களின் நிலையும் தடுமாறியது. அவர்கள் அடைந்த வியப்பிற்கும் அபாரமான பயத்திற்கும் ஓர் எல்லையே இல்லை. தமது தலைக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதாக எண்ணித் தவிக்கின்றார்கள். ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து விழிக்கின்றார்கள். இவர்களுடைய தடுமாற்றமான நிலைமையை முற்றிலு மறிந்த நவநீதம் தனக்குள் சிறிது தைரிய மடைந்து பேசத் தொடங்கி, 'என்ன! அண்ணன்மார்களே! இனிமேல் சாப்பிடலா மல்லவா! நான் உங்கள் சகோதரி என்பது தெரிந்ததா!'' என்று கூறிக்கொண்டே அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டாள்.

இதற்குள் அக் கள்ளர்களில் கடிதம் படித்த பேர்வழி சரே லென்று எழுந்து "ஆகா! என் சகோதரியே! நீ எமது சகோதரி தான் என்பதை நன்றாக அறிந்தோம். நாங்கள் இந்நாட்டு வாசி யல்ல. நாங்கள் வெளிநாடாகிய பினங்கு, சிங்கப்பூர் முதலிய தேசங்களிலேயே வசித்து வந்ததால் எங்களுக்கு இந்தப் பக்கத்துப் பழக்கம் அதிகமாகத் தெரியாது. இனிமேல் தெரிந்துகொண் டோம். எங்களன்பான சகோதரியே! எங்கள் பேரில் கருணை செய்து நாங்கள் உங்களுக்குத் துரோகம் செய்வதற்காக;வந்த செய்தியைத் தாங்கள் அவர்களுக்குக் காட்டிக் கொடுக்கலாகாது. தங்களுக்கு அவர்களுடைய உறுதிமொழி இருப்பதை யறியாது நாங்கள் வந்து

விட்டோம். அம்மணி! எங்களை மன்னிக்கவேண்டும். இன்னொரு தீங்கு கூட உங்களுக்குச் செய்துவிட்டோம். அதாவது:—உங்கள் பர்த்தாவை உண்மையில் போலீஸார் டெலிபோனில் அழைக்க வில்லை. உங்களையும் அவரையும் பிடிக்கும் பொருட்டு எங்கள் எஜமானர் ஏதோ ஓரிடத்திலிருந்து அவரை அழைத்ததோடு டெலிபோன் கம்பியையே அறுத்தும் விட்டார். தங்கள் புருஷர் தற்போது எனது எஜமான் வசத்தில் தான் இருப்பார். நாங்கள் இப்பொழுதே சென்று எங்கள் எஜமானருக்கு இச்செய்தியை உரைத்து உங்கள் புருஷரை அழைத்து வந்து உங்களிடம் சேர்ப்பித்து விடுகிறோம். தாங்கள் சற்றும் பயப்படவேண்டாம். எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்றுகூறும் வார்த்தைகளைக் கேட்டது தான் தாமதம் இவளுடைய உயிரே நீங்கிவிட்டது போலாய் விட்டது. "ஐயோ! வஞ்சக எண்ணத்தை முன்னிட்டு நம் கணவனைக் கள்வர் தலைவன் அழைத்து என்ன செய்து விட்டானோ! ஆ கடவுளே! என்ன பேராபத்தாக முடிந்து விட்டதே!" என்று இமைப் பொழுதில் எண்ணி வருந்துகிறாள். உடனே தன் வருத்தத்தையுள்ளடக்கிக் கொண்டு அவர்களை நோக்கிச் சிறு நகை நகைத்தவாறு, "ஓகோ! என்பர்த்தாவை மாமனார் அழைத்துச் சென்றாரா! மெத்த சந்தோஷம்! தங்களிடம் எனக்குப் பகைமை யிருந்தாலல்லவோ நான் தங்களை யவர்களிடம் காட்டிக் கொடுப்பேன்? தாங்களும் எனது அண்ணன்மார்களாக இருக்கையில் யான் ஏன் காட்டிக் கொடுப்பேன்? அதைப் பற்றி உங்களுக்குச் சிறிதும் பயமே வேண்டாம். என்னை உங்களுடைய சொந்தத் தங்கையைப் போல் எண்ணிக் கவலையற்றிருங்கள். என் பர்த்தாவுக்கு உங்கள் தலைவர் இன்னாரென்று தெரியாது; ஆகையால் அவர் சற்று பயப்படக்கூடும். ஆதலால் உங்களில் யாரேனும் ஒருவர் முதலில் சென்று உங்கள் தலைவரான எனது பிதாவையும், ப்ராணபதியையும் இவ்விடம் அழைத்து வாருங்கள். அது தான் நான் தற்போது கோருவது" என்றாள்.

இதைக் கேட்ட கள்ளர்களில் ஒருவன் வெகு பயபக்தியோடு எழுந்து "சகோதரியே! இதோ நானே போய் இட்டார்ரேன்," என்று கூறிக் கொண்டே ஓட்டமாக ஓடினான்.

நவநீதம் மற்றவர்களை நோக்கி'' அண்ணன்மாரே! அடிக்கடி வந்து எங்களை விசாரித்துக் கொள்ளுங்கள். நீங்களெல்லாரும் இருக்கும் பரியந்தம் எனக்குக் கவலையே இல்லை. அவர்கள் வரட்டும்; நீங்கள் இவைகளைப் புசியுங்கள். புசித்தால் தான் என் மனம் நிம் மதியடையும்'' என்று கூறியவாறு இருக்கையில் திடீரென்று எதையோ எண்ணியவள் போலச் சட்டென எழுந்து உள்ளே சென்று ஒரு கடிதத்தில் பின் வருமாறு ஆங்கிலத்தில் எழுதினுள்.

அவசரம்! மிக்க அவசரம்! இவ்வூரில் வெகுகாலமாகக் கொள்ளையடித்துக் கொண்டே மறைந்திருக்கும் கொள்ளைக் கூட்டத்தாரில் சிலர் தற்போது எங்கள் வீட்டில் வந்து சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். இக்கடிதம் கொண்டுவரும் மனிதனும் கள்வனேயாவன். கடிதத்தைப் பெற்றுக் கொண்டவுடன் அவனைப் பிடித்து லாக்கப்பில் வைத்து விட்டு 15 போலீஸ் வீரர்களையும் மேலதிகாரியையும் உடனே அனுப்ப வேண்டும். என் பர்த்தாவாகிய போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துக்கிருஷ்ண முதலியாரை இக் கள்ளர்களே கமிஷனர் அழைத்தது போல் அழைத்து வெளிப்படுத்திய செய்தியையும் அவர்களாலேயே அறிந்தேன். நான் ஒண்டியாக அகப்பட்டுக் கொண்டு வெகு தந்திரம் செய்து இக்கடிதத்தையனுப்புகிறேன். விபரம் நேரில். உடனே வரவும். உடனே வரவும்.

இங்ஙனம்,
நவநீதம்மாள்.

அதை ஓர் உறையிலிட்டுக் கொணர்ந்து, கள்ளர்களைப் பார்த்து, "அண்ணன்மார்களே! இப்போது ஒரு விஷயம் நினைவிற்கு வந்தது. அதாவது:—என் பர்த்தா இந்தப் பாழாய்ப் போன போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் அமர்ந்ததால் இரவுகாலமில்லை; பகல்வேளை இல்லை. எப்போதும் திடும் திடும் என்று போலீஸ் ஸ்டேஷனிலிருந்து யாரேனும் ஜவான்கள் வந்து அவரை அழைத்துச் சென்றுகொண்டே இருப்பது வழக்கம். அதேபோல இன்றும் இச்சமயத்தில் எந்தத் தடியனாவது வந்து உங்களைக் கண்டுவிட்டால் ஏதேனும் சந்தேகங் கொண்டு பிடிக்க முயல்வார்கள். ஆதலால் இக்கடிதமெழுதி யிருக்கிறேன்.

என்னவெனில்:— என் பர்த்தா ஊரில் இல்லை என்றும், அவரை யழைக்க யாரும் வரவேண்டா மென்றும், வந்ததும் நான் தெரிவிப்ப தாயும் எழுதி யிருக்கிறேன். இதை உங்களில் யாரேனும் கொண்டு போய் எங்கள் வீட்டு குமாஸ்தாவைப் போல நடித்து அவர் களிடம் சேர்ப்பித்து விட்டால் நாம் பயமின்றி நிம்மதியாக விருக்க லாம். உங்களில் யார் சென்றால் தான் அவர்களுக்குத் தெரியுமா என்ன! ஆகையால் சீக்கிரம் சேர்ப்பித்துவிட்டு வாருங்கள்!' என்று வெகு தளுக்காயும் நம்பும்படிக்கும் கூறினாள்

இதைக் கேட்ட அவர்களுக்கு அதுவும் உண்மையாகவே தோன்றியதால் ஒருவன் கடிதத்தை வாங்கிக்கொண்டு ஸ்டேஷனை நோக்கிச் சென்றான். நவநீதம் தன் கணவனின் நினைவாகவே இருந்து தவிக்கிறாள். "இன்னும் வரவில்லையே!" என்று எதிர் பார்த்துக்கொண்டே இவர்களுடனும் பேச்சுக் கொடுத்தவாறே இருக்கிறாள். இவ்விதமே சில நிமிடங்கள் செல்ல, முதலில் எஜமானனை அழைத்து வருவதற்காகச் சென்ற மனிதனும், எஜமான னும் அவ்விடம் வந்தார்கள். நவநீதம் இவர்களைப் பார்த்ததும் தட புடலாக எழுந்து "பிதாவே! வரவேண்டும், வரவேண்டும்!" என்று கூறியவாறு நமஸ்காரம் செய்து எழுந்து ஓராசனத்தைக் காட்டி அதில் அமரச் செய்தாள்; எனினும் கண்கள் தன் நாயகன் வந்து விட்டானா என்பதையே நாற்புறமும் சுற்றிப் பார்த்தன. அவனைக் காணாமையால் அவள் உள்ளம் பகீர் என்று எரிந்தது. மனம் சுழன்று அலைந்தது. அவைகளை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது அடக்கிக்கொண்டே மீண்டும் பேசத் தொடங்கி "பிதாவே! தங்க ளுடைய மருமகப்பிள்ளை எங்கே! காணவில்லையே!" என்றாள்.

இவளுடைய அஸாத்தியமான சாகஸங்களையும், துணிவான சித்தத்தையும் கண்ட எஜமானனுடைய மனமும் ப்ரமித்து வியப் படைந்துவிட்டது. "இதென்ன இது! கள்ளர்கள் கூட்டத்து மத்தி யில் இந்தக் காரிகை இத்தனை தைரியத்துடனும் வெகு காலமாகப் பழகியது போலவும் பேசும் வினயத்தைக் கண்டால் இவள் கூறிய யாவும் உண்மையாயு மிருக்கலாமென்று தோன்றுகின்றதே! அவ்வித மில்லாவிட்டால் இத்துணை துணிபும் நெஞ்சழுத்தமும்

இருப்பது கடினம்; எல்லாவற்றையும் யோசனை செய்து தான் நாம் நடக்கவேண்டும். தென்றேயத்தில் சில வீரர்கள் இருப்பதுவும் அவர்களுடைய உறுதி மொழிகள் சில குடும்பத்திற்கு இருப்பதுவும் உண்மைதான். அந்தக் குடும்பம் இவர்களுடையது தான் என்பதற்கு என்ன அத்தாக்ஷி? ஒரு வேளை இவள் நம்மை ஏமாற்றுவதற்கே இவ்விதமான சூழ்ச்சி செய்து பேசுகின்றுளோ என்கிற சந்தேகமும் உண்டாகின்றது. என்ன செய்வது?'' என்று சற்றுத் தயங்கியவாறே ஆலோசனை செய்தான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. எனினும் பேசாதிருப்பது சரியல்ல என்று எண்ணியவனுய் ஒருவாறு நகைத்துக்கொண்டே பேசத் தொடங்கி, ''அம்மா! என்னருமைப் புதல்வி! மாமனரிடம் சென்ற மருமகப்பிள்ளை விருந்து சாப்பிடாமலும் மாமனர் வீட்டு மரியாதைகளையும், சன்மானங்களையும் பெருமலும் உடனே திரும்பி வந்து விடமுடியுமா?'' என்றான்.

இதைக் கேட்ட நவநீதத்தின் உயிர் துடித்தது. அவள் அதை மேலுக்குக் காட்டிக் கொள்ளாமல் தானும் சிறு நகை செய்த வண்ணம் ''ஆமாம் பிதாவே! நான் சென்ற முறை என் அண்ணன்மார் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் கூட என்னை அவர்கள் வீட்டில் பத்து நாள் இருக்கச் செய்து ஒரு புடவையும் இந்த வைரப் பதக்கமும் பரிசாக அளித்துத் தான் அனுப்பினர்கள். இப்பதக்கத்தில் அவர்களுடைய பெயராகிய வீரண்ணன் என்பதை வைரக்கற்களால் பதித்திருக்கிறது பாருங்கள். வீரண்ணனையறியாதார் வையகத்தில்லை என்று கூறுவார்களே! தாமும் அவரை யறிந்திருப்பீர்களல்லவா?'' என்று கூறியவாறு தன் கழுத்தில் அணிந்திருந்த வைரப் பதக்கத்தை எடுத்து எஜமானனிடம் கொடுத்தாள்.

இதைப் பார்த்த எஜமானனுக்கு இது பரியந்தம் கொண்டிருந்த சந்தேகமெல்லாம் நீங்கத் தலைப்பட்டது. ஏனெனில் தென்றேயத்தில் யாராலும், எந்தப் போலீஸ் புலிகளாலும் பிடிக்க முடியாத மாயா விநோதக் கள்ளனுகிய வீரண்ணனைப் பற்றி எல்லோரு மறிவார்கள். அவனுடைய அதியற்புதமான சாமர்த்தியத்தை வியந்து கொண்டாடாத மனிதர்களில்லை. அக்கள்ளனை

நாமும் அறிவோம். ஆகையால் ஒருகால் அவனுடைய துணையைக் கொண்டவர்களாய் இருப்பினும் இருக்கலாம். நாம் இனி நம்முடைய வேலையைச் செய்தால் அந்த மாயாவி நம்மைத் தவிடு பொடியாக்கி விடுவான். இச்சமயம் நாம் வெறுமனே போய் விட்டு இது சம்பந்த மான உண்மை விவரங்களை விசாரித்தறிந்துகொண்டு உடனே நாம் நமது வேலையை முடிப்போம்." என்று தீர்மானம் செய்து கொண்டு நவநீதத்தை நோக்கி "அம்மா! குழந்தாய்' நீ கூறிய வீரண்ணப்பிர புவை யானும் அறிவேன். எங்களுக்கும் அவர் குடும்பத்திற்கும் அவ்வளவாக நெருங்கிப் பழக்கமில்லாதிருப்பினும் நாங்கள் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களேயாவோம். ஆதலால் நீ என்னிடமும் வித்யாசமின்றி அவர்களிடமிருப்பதேபோல இருப்பாய். உன்னுடைய புருஷன் இதோ வருவார்; கவலைப் படாதே" என்று கூறியவாறு மற்றொருவனை நோக்கி "அடேய்! நீ உடனே சென்று நமது மருமகப் பிள்ளையை அழைத்து வா!" என்றான்.

உடனே அவன் சென்று அடுத்த நிமிடத்தில் முத்துக்ருஷ்ண னுடன் வருவதைக் கண்ட நவநீதம் விரைவில் எழுந்து ஓடித் தன் காதலனின் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து எழுந்தாள். தன் நாதனின் முகம் அபரிமிதமான கோபத்தை யடைந்திருப்பதை ஒரு கணத்தில் தெரிந்து கொண்டாள். அதைச் சாந்தம் செய்ய எண்ணி வெகு வாய் நகைத்துக்கொண்டே "பதிற்பேசவேண்டாம்" என்ற ஜாடையைக் கண்ணினால் காட்டியவாறு பேசத் தொடங்கி "என்ன ப்ராண நாதா! இதோ எனது தந்தையாரும் அண்ணன் மார்களும் வந்திருக்கிறார்கள் பாருங்கள். நமது வீரண்ணனை இவர் களும் அறிவார்களாம். இவர்களும் அவர்களுடைய வகுப்பைச் சேர்ந்தவர்களே யாவார்களாம். நாதா! இன்று நமது குடிசைக்கு இவர்கள் வருவதற்கு நாம் என்ன பூஜை செய்தோமோ தெரிய வில்லை" என்று வெகு சாகஸமாகப் பேசுவதைக் கண்ட முத் துக்ருஷ்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அந்தக் கள்ளனை அப்படியே நசுக்கி விடலாமா என்று எண்ணுகிறான். "ஆனால் நவநீதம் ஏதோ பெரிய சாமர்த்தியத்தினால் இவர்களை ஏமாற்றி இருக்கிறாள்; இச்சமயம் நாம் கோபித்தால் காரியம் கெட்டுவிடும்"

என்று யோசித்தவனும் அவளை நோக்கியவாறு "ஓகோ! நவநீதம்! நமது வீரண்ணரின் இனத்தைச் சேர்ந்தவர்களா இவர்கள்? ஆகா! மெத்த சந்தோஷம்" என்று இவன் பேசிக் கொண்டிருக்கையில் நவநீதம் மெல்லச் சென்று வீதிக் கதவைத் திறந்து வைத்து விட்டு உள்ளே வந்து தன் நாயகனை நோக்கி "அன்பரே! இவர்களுக்கு நாம் செய்யவேண்டிய மரியாதைகள் பல விருப்பினும் காலம் நள்ளிரவாகையினால் ஒன்றும் செய்ய முடியவில்லை; எனினும் இப்பண்டு பலகாரங்களையாகிலும் உண்ணச் செய்யுங்கள்" என்றாள்.

உடனே முத்துக்ருஷ்ணன் அங்கு இலைகளில் ஏற்கனவே வைத்திருந்தவற்றையும் நவநீதம் தற்போது கொண்டளித்தவற்றையும் முறையே வைத்து எஜமானன் முதலாக எல்லோரையும் நோக்கி, "அன்பீர்காள்! ஏதோ ஏழைகள் வீட்டில் எளிய பதார்த்தங்கள் தான் இருக்கின்றன. அன்பு பெரியதாக இருப்பதால் இதைப் புசிக்க வேண்டும்" என்று கூறி அவர்களை உண்ணச் செய்தான். கள்ளர்களும் "தின்பதற்குக் கிடைத்ததை ஏன் தட்டவேண்டும்?" என்ற நோக்கத்துடன் சாப்பிடத் தொடங்கிச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கையில் தட தட வென்று சுமார் 20, 25 போலீஸ் வீரர்களும் 2, 3 அதிகாரிகளும் கையில் ஸ்பிரிங்கினாலான விலங்குகளை எடுத்துக் கொண்டு உள்ளேப்ரவேசித்து "ஆ! ஆ! பூட்டுங்கள் விலங்கை! பூட்டுங்கள் விலங்கை!" என்று ஆர்ப்பரித்துக் கொண்டே அங்குள்ள கள்ளர்களை ;யெல்லாம் தலைக்கு இருவராகப் பிடித்து அவ்விலங்குகளைக் கைகளிலும் கால்களிலும் பூட்டி விட்டுக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நின்றார்கள். கூண்டிலடைபட்ட சிங்கங்களைப் போல கள்ளர்கள் கலங்கினார்கள். அவர்கள் மீசை துடிக்க, கண்கள் சிவக்க நவநீதத்தின்மீது தாங்க மாட்டாத ஆத்திரமும், அபாரமான கோபமும் அடைந்தார்கள். தம்மை நயவஞ்சனையினால் ஏமாற்றி,விட்டனளே இவள் என்கிற அகங்காரமும் ஒன்று கூடிப் பொங்கியது. பல்லைக்கடிக்கின்றார்கள்; ஆவேசங் கொண்டவர்களைப் போல ஆடுகின்றார்கள். போலீஸ் வீரர்களின் கைகளில் சிக்கிக் கொண்டதனால் எதுவும் பேசமாட்டாமல் தத்தளித்துத் துடிக்கின்றார்கள்.

கள்ளர்களைப் பிடித்தவுடன் போலீஸ் அதிகாரிகள் நவநீதத்தையும் முத்துக்ருஷ்ணனையும் நோக்கி "ஆகா! முத்துக்ருஷ்ணமுதலியார்! பல நாளாக நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தேடியும் இக் கொள்ளைக் கூட்டத்தவர்களைச் சேர்ந்தாற்போலப் பிடிப்பதற்குச் சாத்யமற்று விட்டது. தாங்கள் இவர்களில் சிலரைப் பிடித்து விட்டீர்கள். தங்கள் தேவியார் மற்றவர்களைப் பிடித்து விட்டார்கள். ஆகாகா! என்ன சாமர்த்தியமான சூட்சும மதியினல் எத்தனை ஆச்சரியமாய்ப் பிடித்திருக்கிறார்கள்! என்ன விதமாகத்தான் கொண்டாடுவது இந்தம்மாளின் ஆற்றலையும் அறிவையும் என்பதே எங்களுக்கு விளங்கவில்லை. அடாடாடா! இந்த விதமான சாமர்த்திய சாலிகளாக விளங்கக் கூடிய வீரர்கள் துப்பறியும் நிபுணர்களென்றும் அவர்களில் நமது ராஜாராம் நாயுடுகாரு தான் முதன்மை பெற்றவர் என்றும் நாம் கேள்விப்படுகிறோம். திருஷ்டாந்தமாயும் பார்க்கிறோம். வீட்டிற்குள்ளிருந்து க்ருக க்ருத்யங்களில் கவனத்தைச் செலவிடும் இவ்வம்மையாருக்கு இத்தகைய மேன்மையானதும் அதியத்புதமானதுமான முன் யோசனை தோன்றி இக்கள்ளர்களைப் பிடித்த அபாரமான மதியை என்னென்று தான் கூறுவது? அபாரமான திறமையை அறிந்து கூறவும் சக்தியற்ற எங்களுக்கு என்ன செய்வதென்பதே தெரியவில்லை" என்று வெகு வாய் தோத்திரம் செய்தும், உண்மையிலேயே நவநீதத்தின் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தும் மட்டிலடங்கா மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

இவைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முத்துக்ருஷ்ணன், தன் மனைவி இங்கு முதலிலிருந்து என்ன விதமான தந்திரம் செய்து இக்கள்ளர்களைப்பிடித்தாள் என்கிறவிவரமே தெரியாதவனாகையினல், தன் மனைவியின் அதி மேதாவித்தன்மையைப் போலீஸார் புகழுவதைக் கேட்டு ஆநந்த மயமாக மாறினன்; போலீஸாரை நோக்கி, "தாங்கள் இவர்கள் இவ்விடம் வருமுன் விவரத்தை எவ்வாறறிந்தீர்கள்? உங்களுக்கு இங்கு இச்சமயம் கள்ளர்கள் இருப்பதாகத் தெரிவித்தது எவ்விதம்? எனக்கு வியப்பின் மேல் வியப்பாகவிருக்கிறதே!" என்று ஆச்சரியக் குறியுடன் கேட்டான்.

இது கேட்ட போலீஸார் "என்ன ஐயா! இத்தனை தந்திரமாக எவராலும் துணிந்து செய்வதற் கரிதான இக் காரியத்தைச் செய்த

உங்கள் மனைவியார் எங்களுக்கு செய்தி யறிவித்தது ஒரு வியப்பா! முழுவிவரங்களை யறியாவிடினும் சூட்சுமமாகச் சிலவற்றை எமக்குக் கடிதமனுப்பிய ஆள் வசமே கேட்டறிந்தோம். எனினும் சகல விவரங்களையும் நாங்களும் அறியப் பிரியப்படுகிறோம். ஆதலால் நாங்களும் அறியும் வண்ணம் உங்கள் தேவியாரையே கூறும்படி சொல்லுங்கள்'' என்றார்கள்.

இது கேட்ட முத்துக்ருஷ்ணன் "ஆகா! இதோ சொல்லச் சொல்கிறேன்'' என்று கூறி நவநீதத்தை நோக்கினன் "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி'' என்றதுபோல முத்துக்ருஷ்ணனுடைய நோக்கின் நோக்கத்தை ஊக்கமா யறிந்து நவநீதம் குயிலினும் இனிய குரலால் தன் கணவன் சென்றது முதலான சகலமான வரலாற்றையும் கூறி முடித்தாள். இதைக் கேட்ட முத்துக்ருஷ்ணனும் வியப்பை யடைந்து தம்பித்துவிட்டான். பின்னர்ப் போலீஸார் முத்துக்ருஷ்ணனை நோக்கி "ஐயா! உம்மை டெலிபோனில் அழைத்த இப்பாதகர்கள் உம்மை என்ன செய்தார்கள் கூறவில்லையே!'' என்றார்கள்.

இதுகேட்ட முத்துக்ருஷ்ணன் வெகு ஆத்திரத்துடன் பேசத் தொடங்கி "ஆகா! நான் அப்போது அயர்ந்து நித்திரை செய்தேன். அச்சமயம் நமது மேலதிகாரி யழைக்கச் சொல்லியது போல டெலிபோனில் யாரோ அழைத்ததை என் மனைவி தெரிவித்தாள். உடனே நான் எழுந்து சென்றேன். செல்லும் மார்க்கத்தில் திடீரென்று இருவர் என்னைப் பின்புறமாகத் தொடர்ந்து வந்து கெட்டியாகப் பிடித்துக் கையைப் பின்புறமே கட்டிவிட்டுக் கண்ணையும் திடீரென்று கட்டி, வாயிலும் துணியை அடைத்து என்னைப் பலவாறாகத் தூஷித்துத் திட்டிக்கொண்டே எவ்விடத்திற்கோ நடத்திச் சென்று சிறிது தூரம் சென்றதும் நின்றுவிட்டார்கள். "அடேய்! போலீஸ் புலியே! இப்போது ஓர் எலியைப் போலல்லவா என் கையில் அகப்பட்டுக்கொண்டாய்?. எங்கள் கூட்டத்தில் ஓர் பகுதியினரைப் பிடித்துவிட்ட மமதையல்லவா உன்னை ஆட்டிற்று! இப்போது என்ன செய்வாய்? இதோ உத்திர க்ஷணத்தில் இன்னும் என்ன நடக்கின்றது பார்'' என்று ஊப்பிக் கூறி என்னை உபத்திர

வித்துக்கொண்டிருக்கையில், இவர்களைச் சேர்ந்த ஓர் ஆள் வந்து ஏதோ மெல்ல விஷயங்களை உரைத்தான். அவைகளைப் பூராவும் யானறியாவிடினும் "வீரண்ணனுடைய துணையைப் பெற்றவளாம்! உறுதிச் சீட்டை அந்தம்மாள் காட்டினுள். உங்களையழைத்து வரச் சொன்னுள்" என்றது மட்டும் சொன்னது என் காதிற் கேட்டது. எனக்குப் பலவித யோசனையும் குழப்பமும் சங்கடமும் உண்டாய்விட்டன. எனது வாய் திறந்து கூச்சலிடுவதற்கு வாய் கிடையாது. கண் பார்க்கக் கூடாது கட்டியிருந்தது. கையை எடுக்கமாட்டாது பிணைத்திருந்ததால் யான் ஒன்றும் தோன்ருதவனுய் நின்றேன்.

உடனே என்னை விடுத்து ஒருவனைக் காவல் வைத்துவிட்டு மற்றவர் சென்றதுபோலான ஜாடையை மட்டும் நான் அறிந்தேன். அதன்மேல் சிறிதுநேரங் கழிந்து மற்றுமோர் ஆள் வந்து என் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு என்னை அழைத்துக்கொண்டு வந்தான். நான் அப்பொழுதே அவனை எதிர்த்துத் தாக்கியிருப்பேன்; எனினும் நவநீதத்தின் சூட்சி யாதோ, என் வீட்டில் நவநீதம் தனிமையிலிருக்கையில் இக் கள்ளர் தலைவன் சென்றுள்ளதனுல் நாம் முதலில் வீட்டை யடைந்த பின்னரே மற்றச் செய்தியை நினைக்கவேண்டும் எனத் தீர்மானித்து இங்கு வந்தேன். வந்தவுடனே நவநீதம் எனக்குச் சில குறிப்புகளைக் கண்களால் ஜாடை செய்து தானே முதலில் பக்குவமாகப் பேசினுள். பின்னர் யான் ஒருவாறு யூகித்துக்கொண்டு அவள் கூறியபடியே நடந்துகொண்டேன். அதே தருணம் நீங்களும் வந்தீர்கள்" என்ருன்.

இதைக் கேட்ட நவநீதமும் போலீஸாரும் வியப்புற்றனர். நேரமாய் விட்டபடியால் கள்ளர்களைப் போலீஸார் நடத்திக் கொண்டு சென்ருர்கள். கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்த நவநீதம் "ஆகா! என் ப்ராண காந்தா! கடவுளின் திருவருட்பிரபாவத்தை என்னென்று கூறுவது? அந்தோ! நினைத்தாலும் பயமாக இருக்கின்றதே! நமக்கு இன்று ஒரு பெரிய கண்டம் நீங்கியது போலல்லவா இருக்கின்றது. அடாடா! என்ன ஆபத்தான நிலையில் அகப்பட்டு அவதியுற்று அலையும் தறுவாயிலிருந்தோம்.

கடவுளே நேரில் வந்து நம்மைக் காத்த அதி யற்புதமான இந்த லீலையை எண்ணிடில் எனக்கே கட்டிலடங்காத பரமாச்சரிய முண்டாகிறது. நாதா! அவர்கள் கமிஷனர் அழைத்தனரெனத் தங்களை யழைத்தது, உங்களை வதை செய்து, பின்னர் என்னையே அடித்துக்கொண்டு போவதற்காகத் துணிந்ததன்றோ? கருணா மூர்த்தியே எனக்கு இச்சமயம் பயத்தை யொழித்து அவர்கள் எதிரில் செல்லும்படியாக தைரியம் தந்தார். உலகத்தில் மாந்தர் பிணியைத் தீர்க்கப் பலவித அவுடதங்களிருக்கின்றன. அவைகளை யுட்கொண்டால் நாட்கணக்காகவோ, மாதக் கணக்காகவோ, வருடக் கணக்காகவோ அவை பலா பலன்களைக் காட்டுகின்றன! ஆகா! என்னப்பனின் திவ்ய நாமமாகிய தெவிட்டாத அவுடதமோ உடலின் பிணியைப் போக்குவதுடன் செவி, மனம், இருதயம், நேத்திரம் ஆகிய ரஸநேந்திரியங்களுக்கும் உத்திர க்ஷணமே உவமையிலாத அபாரமான ஆநந்தத்தையளிக்கக்கூடியது; அன்றியும் பிறவிப் பிணியை நீக்கிப் பாப மலையைத் தகர்த்து, கர்மானுபவத்தை யொழித்து, முத்தி மார்க்கத்தை அளித்துச் சத்ருக்களைச் சங்கரித்துக் காத்தருள் செய்யும் கண்ணியமும் மேன்மையும் பொருந்திய புனிதமான அவுடதமது. அந்த அவுடதத்தை யாரொருவர் பரிசுத்தமான மனத்துடனும், உண்மையான பக்தி விசுவாசம் நிறைந்த, அதாவது நீயே தஞ்சமென்ற நம்பிக்கை யுடனும் அநந்ய பாவமாக நின்தாளே சதமன்றி என் மனத்திற்கு மற்றெதுவும் பதமல்ல என்ற திடசித்தத்துடனும் "நாயேன் வந்தடைந்தேன் நல்கி எனையாட்கொண்டருளே" என்று ஆழ்வார்கதறியது போலக் கதறி, அஞ்சலி செய்து, கெஞ்சி, இறைஞ்சிவேண்டித் தொழுபவரை அஞ்சேலென்று அபய மளித்துக் காத்து ரக்ஷிப்பது அவனது தொழிலல்லவா! அதை யவன் கைவிடுவனு! தன்னை அந்தக்கரண சுத்தியாக ஆத்மக்யானமாகத் தொழுத எந்த பக்தரையேனும் காப்பாற்றாது கைவிட்டதுண்டா? ஆத்ம சுத்தியாயும் ஏகமனதுடனும் "நீயே கதி; நியே எனக்கதிபதி; உன்னை யன்றி எனக்குவேறு உறைவிடமில்லை" என்று தொழுது கதிபெற்றத் தொண்டர்களின் எண்ணிக்கை தொகுத்துக் கூறவல்லதா! அவனே நம்மையும் காப்பான். நாதா! அந்தப் பேராயிரம் படைத்தப் பெருமானின் சீரான

திவ்ய நாமத்தை நேராக இசை கூட்டிப் பாடியதைக் கேவலமான, அக்கள்ளர் கூட்டத்தவரு மல்லவா கொள்ளையிடுவதை மறந்து தெள்ளிய மனத்துடன் மெள்ள அமர்ந்து கேட்டுக்கொண்டிருந் தார்கள். நாதா! யானும் எத்தனையோ விதம் யோசித்துப் பார்த் தேன்; ஒன்றும் புரியவில்லை. அந்தப் பரந்தாமனை மனங் குவிந்து தோத்திரம் செய்கையிலேயே மேற் குறித்த யோசனைகள் பிறந்தன. அக்கடவுளே மறைய விருந்து நாம் தப்பும்படி காத் தருளினர்" என்று நவநீதம் கடவுளின் மகிமையைப் பற்றிப் பேசிக் கொண்டே யிருக்கையில் முத்துக்ருஷ்ணன் இடை மறுத்து நவநீதத்தை நோக்கி "ஆகா! நவநீதம்! உன்னுடைய தெய்வ பக்தி யின் பலனல் இன்று இருவரும் இவ்வாபத்தினின்றும் நீங்கினேம். அந்தக் கள்ளர்கள் செல்கையில் உன்னை யவர்கள் பார்த்த ஓர் பார்வையைக் கண்டு யான் நடுங்கிவிட்டேன். உன்னை அவர்கள் பழிக்குப் பழிவாங்காது விடுவதாகக் காணவில்லை. அவர்கள் பார்வை அதை நன்ருக உணர்த்துகின்றது. அவர்கள் கூட்டத்தில் இன்னும் எத்தனை பேர்கள் இருக்கின்றார்களோ! அவர்களை யெல்லாம் ஒழித்தாலன்றோ நமக்குப் பயம் நீங்கும்? இவர்கள் மற்ற வர்களைக் கொண்டு உனக்குக் கெடுதியை விளைவித்தால் என்ன செய்வது என்பதைநினைக்க எனது உள்ளம் பதறுகின்றதே! என்ன செய்வேன்?" என்று வருத்தமுற்றான்.

இதைக் கேட்ட நவநீதம் சிறு நகை புரிந்தவாறு பேசத் தொடங்கி "ஆகா! ப்ராணநாதா! இதுகாறும் கூறியதை மறந்தீர் களே! நாம் வருந்துவதாலும் பயப்படுவதாலும் ஏதேனும் காரியத்தைச் சாதிக்கக் கூடுமா? அவன் கருணையும் கட்டளையும் எவ்வெவ்வித மிருக்கின்றனவோ அவ்விதமல்லவா யாவும் நடக்கும்? நாம் வீணுக ஏன் கவலைப்படவேண்டும்? கவலைப்படும் அந்நேரத்தைக் கடவுளின் மீது செலுத்தி த்யானம் செய்தால் நமது கவலையை அவர் கணப்பொழுதில் மாற்றி களிப்புறச் செய்து விடுகிறார். அதை விடுத்து நாம் எதற்காகக் கவலைப் பட்டுக் கலங்கி யுருக வேண்டும்? அக் கள்வர்கள் பார்த்த பார்வையை யானு மறிவேன். ஜகதீசனுடைய பார்வை நம்மிடமிருக்கும் போது அவர்கள் பார்வை

நம்மை என்ன செய்துவிடும்? நமக்கு அவர்களால் மீண்டும் ஆபத்து நேரும் படியான விதி நமக்கிருப்பின் நாம் அவ்வாபத்தில் சிக்கியுழலத்தான் வேண்டும். அல்லது அவ்வாபத்தி னின்றும் நீங்கும் படியாகக் கடவுளின் திருவருள் நோக்க மிருப்பின் நமக்கு அதற்கான வழி காட்டி அவரே நம்மைக்காத்தருள்வார். தாங்கள் கவலை கொள்ளவேண்டாம்" என்று நாயகனைத் தேற்றினாள்.

இதற்குள் அவளுக்கோர் யோசனை தோன்றியது. உடனே தன் நாதனை நோக்கி "நாதர்! எனக்கோர் யோசனை தோன்றுகின்றது. அதாவது தாங்கள் இப்போதே போலீஸ் ஸ்டேஷனை யடைந்து அங்கு முதலிலனுப்பப்பட்ட கள்ளனைத் தனித்த விடத்தில் அழைத்து அக்கள்ளக் கூட்டத்து விவரங்களை யெல்லாம் கூறி விட்டால் அவனை விடுதலை செய்து விடுவதுடன் சன்மானம் கொடுப்பதாயுங்கூறி நயத்திலும் பயத்திலுங்கேட்டுத் தெரிந்துகொண்டு அக்கூட்டத்தை வேருடன்அறுத்து விட்டால் பின்னர் ஒரு விதமான பயமுமிராதன்றோ. ஆகையால் அவ்விதஞ்செய்வதே உசிதமென்று தோன்றுகின்றது. இப்பொழுது பொழுது புலரும் நேரமும் ஆய்விட்டதால்அவ்விதமே செய்யுங்கள்" என்றாள்.

இது கேட்ட முத்துக்ருஷ்ணன் அதை ஆமோதித்து அவ்விதமே செய்வதாகக் கூறி விட்டுப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்று இவ்விஷயத்தை மற்றைய போலீஸ்அதிகாரிகளுக்குத் தெரிவித்தான். இதை யெல்லோரும் ஒன்று கூடி ஆமோதித்த பின்னர் அந்தக் கடிதம் கொணர்ந்த கள்ளனை மட்டும் தனித்ததோர் இடத்திற்கு அழைத்துச் சென்று நவநீதம் கூறிய யோசனைப் படியே "அப்பா! உன்னை நாங்கள் மன்னித்து விட்டு விடத் தீர்மானித்து விட்டோம். ஆகையினால் நீ உங்களுடைய கூட்டத்தவரின் வரலாறுகளையும் இருக்கு மிடத்தையும் ஒளியாது கூறிவிட்டால் உன்னைத் தண்டியாமல் விட்டு விடுவதுடன் உனக்கு தகுந்த சன்மானமும் அளிக்கின்றோம். நீ சொல்லாவிட்டால் நீ படப் போகும் இம்சையைக் கூறச் சாத்தியமன்று. நீ கூறிவிடுவதால் உனக்கு நன்மையேயன்றித் தீமை ஒரு சிறிதும் வராது. ஆகையால் உண்மையை உரைத்து விடு" என்று வெகு நயமாகக் கேட்டார்கள்,

இதைக் கேட்ட அக்கள்ளன் முதலில் சொல்ல மறுத்து விட்டான். பின்னர் இவர்கள் சொல்லிய வார்த்தையால் பயமடைந்து தான் எவ்விதமேனும் தப்பினுல் போதும் என்கிற நோக்கத்துடன் கூறத் தொடங்கி, "ஐயா! எஜமான்களே! அப்போது அந்தம்மா இப்பிடி தான் ஏமாத்திப் புட்டு என்னெப்புடிச்சி வச்சிட்டாங்க; நீங்களும் இப்ப அப்பிடிதாஞ் சேவிங்களொண்ணுட்டு பயமாக்கிறுங்க. நீங்க சொல்றபடி உளுமையா என்னெ உட்டேட்ர நீந்தாக்கா நானு சொல்லுப் புடரேன்!" என்ருன்.

போலீஸார்:—"அடே உண்மையிலேயே விட்டுவிடக்கருதித் தான் கேட்கிருேம். நீ சற்றும் பயமின்றிச் சொல்லி விடு" என்ருர்கள்.

அதன் மேல் அக் கள்ளன் தங்கள் கூட்டத்தின் மர்மங்களையும், அக்கூட்டத்தின் கிளைகள் பற்பல ஊர்களில் இருப்பதையும் தானே மாறு வேடம் புனைந்து கூடச் சென்று காட்டுவதாயும் இன்னும் மற்ற எல்லாக் கள்ளர்களையும் தானே பிடித்துத் தருவதாகவும் வாக்குறுதி கூறி விட்டான். பிறகு அவனைக் கூட அழைத்துக் கொண்டு அவ்வூரிலிருக்கும் கள்ளர்களின் வாசஸ்தானத்தைப் பார்க்கும் பொருட்டாக அனேக போலீஸ் வீரர்கள் தக்க ஆயுதங்களுடன் கிளம்பினுர்கள். முத்துக்ருஷ்ணன் மட்டும் இரவு முற்றும் அல்லற்பட்டுக் கண் விழித்த சிரமத்தினுல் சற்று நித்திரை கொள்ளும் பொருட்டுத் தன் வீடு திரும்பி வந்தான்.

நவநீதம் வழக்கம் போல் காலைப் போஜனத்தைத் தயார் செய்து தன் கணவனுக்கு இட்டுத் தானும் உண்டு பின்னர்த் தனது வேலையைக் கவனிக்கச் சென்ருள். முத்துக்கிருஷ்ணனும் சயனித்துக்கொண்டு கண்ணயர்ந்தான். 8 மணி சுமாருக்குத் தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். சாதாரணமாக முத்துக்ருஷ்ணனுக்கு வரும் கடிதங்களை அவனுடைய அனுமதியின் பேரில் நவநீதம் பிரித்துப் படிப்பது வழக்கமாகையினுல் அந்தக் கடிதத்தையும் பிரிக்க முயன்ருள். ஆனுல் அப்போது தன் கணவன் வீட்டிலிருந்தமையாலும் தனக்குச் சமயல் வேலை அவசரமாக இருந்தமையாலும் அதை உடைக்காது போய் விட்டாள்.

பின்னர்ச் சற்று நேரத்திற் கெல்லாம் தன் கணவன் துயில் நீங்கி எழுந்தவுடன் அக்கடிதத்தைத் தன் கணவனிடம் கொடுத்தாள். அதையவன் வாங்கி உடைத்துப் படிக்கத் தொடங்கி இரண்டு வரிகளைப் படித்ததும் சட்டென்று கடிதத்தை மூடி மறைத்து விட்டான். படிக்க ஆரம்பித்த கடிதத்தை இதற்குள்ளாகப் படிக்காது மூடி விட்ட காரணத்தை யறியாத நவநீதம் தன்னுயகனருகில் வந்து "நாதா! இதென்ன கடிதம்? எங்கிருந்து வந்திருக்கிறது? படிக்க ஆரம்பித்தவர்கள் இதற்குள் ஏன் மூடி விட்டீர்கள்? இதில் நான் காணக் கூடாத இரகஸியச் செய்தி ஏதேனும் இருக்கிறதா? மேலும் இதில் ஏதோ படம் போலத் தெரிந்ததே அது என்ன? எனக்குக் காட்டலாகாதா!" என்று வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டாள். இது கேட்ட முத்துக்ருஷ்ணன் இன்னது சொல்வது என்பதை யறியாதவனுய்க் கடிதமும் கையுமாக உட்கார்ந்து விட்டான்.

6—வது அதிகாரம்

பட்டை தீட்டிய புதிய வைரம்

தாஞ்சாபகதுரைக் காணுமல் தேடித்திரியும் உபாத்தியாயருக்கும் அவருடைய தர்மபத்தினியாருக்கும் உண்மையாகவே அவனிடத்தில் ஒருவிதமான பாசம் ஏற்பட்டு விட்டதால் அவன் வராமையைக் கண்டு அபாரமான கலக்கத்தை யடைந்து நாலா பக்கங்களிலும் இருவரும் தேடுகின்றுர்கள். இரவு மணி 8 அடித்து விட்டது. இன்னும் பையனைக் காணவில்லை. அருகிலிருக்கும் சில பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளை அழைத்து "சிதம்பரம் எங்கே! அவனை எங்கேனும் கண்டீர்களா!?" என்று உபாத்தியாயர் அதட்டிக் கேட்டார்.

இது கேட்ட பிள்ளைகள் வெளியூரிலிருந்து வரும் பிள்ளைகள் செய்யும் அக்ரமத்தையும், அவ்விதம் அவர்கள் செய்வதை உபாத்தியாயரிடம் யார் தெரிவித்தாலும் அவனைச் சூட்டுக்|கோலால்மீட்டி விடுவார் என்று எல்லோரையும் பயப்படுத்தி இருப்பதையும் அதற்குப்

பயந்து தாஞ்சாபகதூர் தினந்தோறும் மூட்டையைத் தூக்கிச் செல்வதையும் ஒன்று விடாமல் உண்மையை உரைத்து விட்டார்கள்.

இதைக் கேட்ட உபாத்தியாயருக்கு அந்தப் பிள்ளைகள் மீது வந்து விட்டது கோபம். "ஐயோ! பாவம்! உலகவியலையே அறியாத பேதைப் பாலகனென்று அறிந்தும் இவ்விதம் அவனிடத்தில் வேலை வாங்குகிறார்களா! ஆகட்டும்; நான் அவர்களை என்ன செய்கிறேன் பார்" என்று ஆத்திரத்துடன் மொழிந்தவாறு தன் கையில் ஓர் தடியை எடுத்துக் கொண்டு வீட்டில் சொல்லிவிட்டு அன்று தாஞ்சாபகதூர் மூட்டை தூக்கிச் சென்ற ஊரை விசாரித்துக் கொண்டு அவ்விடத்திற்குச் சென்றார்.

அங்கு ஒரு வீட்டின் வீதித்திண்ணையில் நெல் மூட்டைகள் நிறைய அடுக்கி யிருந்தன. அவைகளை யெல்லாம் ஒவ்வொன்றாகத் தூக்கி வீட்டுக்குள்ளிருக்கும் குதிரில் கொண்டுகொட்டி விடும்படியாக அந்த வீட்டுப்பிள்ளை தாஞ்சாபகதூரிடத்தில்சொல்லி அவனை மிரட்டி அவனிடத்தில் வேலையை வாங்குகிறான். அப்பொழுது "அடே சிதம்பரம்; இன்று நீ இம் மூட்டைகளை யெல்லாம் எடுத்து அடுக்கிவிட்டுத் தான் வீட்டிற்குச் செல்லவேண்டும். இது உபாத்தியாயர் கட்டளை என்பதை யறியாயா! இல்லாவிட்டால் உபாத்தியாயர் சூட்டுக்கோலால் சிங்காரமாக வாட்டிவிடுவார். சீக்கிரம் இம்மூட்டைகளை எடுத்துப்போய் குதிரில் நெற்களைக் கொட்டி விட்டு உடனே போய் விடு" என்று கூறி அவனை அதட்டினான். அதைக் கேட்டுக் கொண்டே சென்ற உபாத்தியாயருக்கு அப்பொழுது வந்த கோபத்திற்கு ஓர் எல்லையே சொல்லக் கூடவில்லை. அவர் பல்லைக் கடிக்கின்றார் கையை உதறுகின்றார்; அந்தப் பயல்களை அப்படியே நசுக்கி விடலாமா என்று பார்க்கிறார். மீண்டும் ஏதோ யோசனை செய்தவாறு தட தட வென்று நேரே எதிரில் சென்று "அடே சிதம்பரம்!" என்று ஓர் கர்ஜனை செய்வதுபோல அழைத்தார்.

உபாத்தியாயர் அங்கு வருவார் என்பதை சொப்பனத்திலு மறியாத பிள்ளைகளும் தாஞ்சாபகதூரும் நடுநடுங்கி கால்கள் விலவிலக்கப் பெரு மூச்சு விட்ட வண்ணம் மிரள மிரள விழித்துக்

கொண்டு நின்று விட்டார்கள். அடுத்த க்ஷணத்தில் தாஞ்சா பகதூரைத் தவிர மற்றைய பிள்ளைகளெல்லாம் உள்ளே ஓடி ஒளிந்து கொண்டார்கள். உபாத்தியாயர் தாஞ்சாபகதூரின்மீது அளவிலாத பச்சாத்தாப மடைந்தவராதலாலும் அவன் மீதுகுற்ற மில்லாது மற்ற பிள்ளைகளின் மீதே குற்றமிருப்பதாலும் இவனை யாதும் சொல்வது கூடாதென எண்ணியவராய் தாஞ்சா பகதூரின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு;மற்ற பிள்ளை களைச் சிறிதும் கவனியாமலும், அவர்களுடைய பெற்றோரை யும் பார்க்காமலும் தட தடவென்று நடந்து வழியில் சிதம்பரத்தை ஏதும் சொல்லாமல் வீடு வந்து சேர்ந்தார்.

குருவின் பத்தினியும் தாஞ்சாவின் வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். தன் கணவனும் சிதம்பரமும் வரு வதைக் கண்டு களிப்புடன் வரவேற்று நடந்த செய்தியை விசாரித் தாள். உபாத்தியாயர் பிள்ளைகளின் வஞ்சக எண்ணத்தையும் அவர் கள் மோசமொழிகளையுங் கூறி இவனைப் பயப்படுத்தி இவனிடம் தினந்தோறும் வேலையை வாங்கிக்கொண்டு வருகிறார்களாம். அவ் வாறு இவன் வேலை செய்யாவிட்டால் இவனை நான் அடித்துச் சூடு போடுவேன் என்றும் கூறி யிருக்கிறார்களாம். இன்றும் அவ்வாறே கூறி வீதித் திண்ணை நிறையக் கிடந்த மூட்டைகளை எடுத்து வரிசையாக அடுக்கும்படி நானே கூறியது போல் சொல்லிக் கொண்டிருந்ததை நான் நேரில் கேட்டுக்கொண்டே சென்றேன். தடிப் பயல்கள் நாளைக்கு வரட்டும்; சரியான வழியில் பார்த்துக் கொள்கிறேன்." என்று கோபத்துடன் கூறினர்.

பின்னர் உபாத்தியாயரும் சிதம்பரமும் போஜனம் செய்தார் கள். அன்று செல்ல மறுதினம் வழக்கம் போல் பாடசாலை கூடிற்று. முதல் நாள் சிதம்பரத்தை அழைத்துச் சென்ற பிள்ளைகள் 'உபாத்தியாயர் என்ன செய்வாரோ!' என்று நடுங் கியபடியே ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்கள். உபாத்தி யாயர் சூட்டுக்கோலை நன்றாகக் காய்ச்சி அதை எடுத்துக் கொ ண்டுவந்து சிதம்பரத்தினிடம் எந்தெந்தப் பிள்ளைகள் வேலை வாங்கிக் கொண்டார்களோ அவர்களையெல்லாம நன்றாக உபசரித்து

27854

"ஐயோ அம்மா!" என்று அலறும்படியாகச்செய்து "அடேய்! தடிப் பயல்களா! உங்களுக்கு இத்தனை மண்டை கர்வமா இருக்கிறது! ஐயோ! வெகு சாது; கள்ளம் கபடு தெரியாத பேதை யொருவன் அகப்பட்டால் அவனிடம் வேலை வாங்குவது மன்றி நானே செய்யும்படியாகக் கூறிய தாகவும் பயமுறுத்தியுமா வருகிறீர்கள்? இருக்கட்டும்; உங்களுடைய இத்துஷ்ட நடத்தைகளை நான் மட்டும் கண்டு அதற்காக உங்களைத் தண்டிப்பது போதாது. உங்கள் பெற்றோருடனும் கூறி உங்களுக்குச் சோறு இடாது பட்டினி போடும்படிக்குத் திட்டம் செய்கிறேன் இருங்கள்" என்று கண்டித்து, அடித்து, வைது, மிரட்டிப் பின் பாடங்களை ஆரம்பித்தார்.

அன்று முதல் பிள்ளைகள் தாஞ்சாபகதுரின் வழிக்கே வராது வெகு ஒழுங்காய் நடக்கத் தலைபட்டார்கள். தாஞ்சாபகதூரும் உபாத்தியாயருடைய போதனையின் பயனாக நாளாவட்டத்தில் நன்றாகப் படிக்கப் பழகிச் சிறிது புத்தியு மடைந்தான். தனது பழைய அசட்டுச் செய்கைகளையும் மூஞ்சூறு பிடிக்க வந்த வயிற்றெரிச்சலையும் தானே உணர்ந்து துக்கிக்கவும், வெட்கிக்கவும் தலைப்பட்டான். தான் குதிரையின் வயிற்றைக் கண்டு மூட எண்ணம் எண்ணியது தனது மவுட்டீகத் தன்மை என்பதையும் நன்றாக அறிந்துகொண்டு தன்னையே தான் சீராகச் செய்து கொள்ளும் பக்குவத்தில் பழகிவிட்டான். உபாத்தியாயருக்கும் சிதம்பரத்தினிடத்தில் அத்யந்தப்ரீதி யுண்டாயது. பின் அவர் வெகு அக்கரையாயும் கனிந்த அன்புடனும் பாடங்களைக் கற்பித்து அவனை எல்லாவற்றிலும் முதன்மை யடையும் படிச்செய்து விட்டார். இவ்விதமாகவே சில வருடங்கள் சென்றன.

உபாத்தியாயருடைய மனைவியார் திடீரென்று ஒரு விதமான நோய் கொண்டு இறந்துவிட்டார்கள். அவ்வம்மையாருக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையுமே இருந்தன. உபாத்தியாயருடைய சகோதரியார் அவ்வாண் குழந்தையைத் தத்து எடுத்துக் கொண்டு விட்டார்கள். பெண் குழந்தை மட்டும் அவரிடமிருந்த காலை மனைவி இறந்துவிட்ட விசனம்தாங்க மாட்டாது அவர்புலம்பித் தவித்தார்; முட்டிக்கொண்டு அழுதார். அபாரமான விசனத்தினால்

சகிக்கக்கூடாத சங்கடத்தை யடைந்து தனது உபாத்திமைத் தொழிலையும் விட்டு விட்டு சதா "ஹா! ஜானகி!! ஜானகி" என்ற அனற்றலாலேயே கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டார்.

சிதம்பரம் உபாத்தியாயரைத் தேற்றி உபசரித்து வீட்டுப் பணிவிடைகளைத் தானே செய்து உபாத்தியாயரின் பெண் குழந்தையாகிய எழு வயதுள்ள ஏமாவதிக்கும் தேறுதல்களைக் கூறிக்கொண்டே வெகுவாய் இருவரையும் கவனித்துக்கொண்டு வருவதுடன் உபாத்தியாயருடைய தொழில் நின்று விட்டால் வருமானமும் நின்று விடுமே என்ற பகுத்தறிவு தெரிந்தவனாய் உபாத்தியாயர் நோய் தெளிந்து வருமளவும் தானே பாடசாலையை நடத்துவதாகத் தீர்மானித்து அவ்வெண்ணத்தைத் தன் உபாத்தியாயருடன் தெரிவித்தான். உபாத்தியாயரும் அங்ஙனமே செய்வதற்குச் சம்மதித்தபடியால் மீண்டும் வழக்கம் போல பாடசாலை நடந்து வருவதாயிற்று. நமது சிதம்பரத்திற்கு ஏற்கனவே கல்வியில் அதிகப்ரீதியுண்டாயிருந்ததாகையினால் அவனுடைய உபாத்தியாயரின் முயற்சியினாலும் தன்னுடைய அவாவினாலும் அதிசீக்கிரத்தில் அபாரமான மதியுள்ளவனாயும் படிப்பாளியாயும், ஆய்விட்டதனால் தனக்குத் தெரிந்த பாடங்களைக் கொண்டும், தெரியாத பாடங்களை உபாத்தியாயரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டும் மற்ற பிள்ளைகளுக்கு வெகு திறமையாயும் ஒழுங்காயும் பாடத்தை கற்பித்து வந்தான்.

தாஞ்சா பகதூர் ஆதியிலிருந்த மவுட்டீகத்தன்மையையும் அவன் செய்து வந்த அசட்டுத் தனத்தையும் கண்டு அப்போது நகைத்து அவனைப் பரிகசித்து அவனிடம் வேலையை வாங்கிக் கொண்டு விரட்டிய பிள்ளைகளே இப்போது சிதம்பரத்தினிடத்தில், உபாத்தியாயரிடத்தில் எவ்வித மிருந்தார்களோ அதே போல அதிக பயபக்தியுடன் நடந்துவர நேரிட்டது. அது கண்டு அவர்களே தமக்குள் வியந்து கூறிக்கொண்டு தாங்கள் செய்தது தவறென்றுணர்ந்தார்கள்.

உபாத்தியாயர் தம் மனைவியின் பிரிவாற்றாத வருத்தத்தினால் ஏக்கமடைந்து ஊண் உறக்கத்தைத் துறந்து சதா கண்ணீர் விட்ட

வண்ணமாக இருப்பதைக் கண்ட அவருடைய சினேகிதர்கள் அவரை மறு விவாகம் செய்துகொள்ளும்படி எவ்வளவோ தூரம் சொல்லியும் அவர் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டார். அவ்வூரில் கலியாணம் செய்து வைக்கும் தரகர் ஒருவர் உபாத்தியாயரிடம் வந்து "ஐயா! உபாத்தியாயரே! ஏன் இவ்விதம் வீணாக விவாகம் செய்து கொள்ளாமல் அவஸ்தைப் படுகிறீர்கள்? உமக்கோ யாரும் திக்குக் கிடையாது. இருப்பது ஒரு சகோதரி; அவர்கள் உங்கள் குழந்தையைத்தத்து எடுத்துக்கொண்டும் உமக்கும் அவர்களுக்கும் மனஸ்தாபத்தினால் போக்குவரத்தும் கிடையாது. அதோடு அவர்கள் தற்போது ஏதோ ஒரு குற்றத்திற்காகத் தலை மறைவாய் எங்கோ சென்று விட்டதாகவும் கேள்விப் படுகிறேன். ஆதலால் தாங்கள் ஒருவிதத் திக்குமின்றி எவ்விதம் கடைசிவரையில் காலத்தைக் கடத்துவீர்? உங்களுக்கு ஒரு வாய் சோறு படைப்பதற்காக வாவது ஒரு துணை வேண்டாமா? பேஷான பெண்ஒருத்தி இருக்கிறாள். வயது பதினாறுக்கு மேலாய் விட்டது. அழகோ கேட்க வேண்டாம். அவளுடைய குலம் முதலிய குணங் களைச் சொல்லவேவேண்டாம். ஆகையால் அந்தப் பெண்ணை உமக்கு முடித்து விடுகிறேன். நீர் ஒரு வார்த்தை கூறிவிடும். இதோ காரி யத்தை முடித்து விடுகிறேன்." என்று தடபுடலாக மனது கரையும் படியாகக் கூறினார்.

இதைக் கேட்ட உபாத்தியாயர் சற்று சலித்த பார்வையுடன் பேசத் தொடங்கி "ஓய்! முதலியாரே! உம்முடைய பேரும் தொழிலின் மகிமையையும் அதனாலடைந்துள்ள புகழும் யானறிய மாட்டேனென்று என்னிடமே நீர் பேசுகின்றீர்? விதவையை ஒரு ப்ரம்மச்சாரிக்குக் கன்னிதானம் செய்து கொடுக்கச் செய்து செருப் படி வாங்கிய சிலர் நீரல்லவா? அதை யானறிய மாட்டேனென்று எண்ணினீரா! சென்ற வருடத்தில் அடுத்த ஊர் அரசப்ப முதலி யாரின் குமாரருக்கு ஓர் முண்டைச்சி பெற்ற பெண்ணை மணம் செய்வித்து விட்டு அதனால் உமக்கு தண்டனைக்கிடைத்ததை, நீர் மறந்து விட்டீரோ இதற்குள்" என்று சொல்லிக்கொண்டிருக் கையில் உபாத்தியாயருடைய சினேகிதர் ஒருவர் வந்தார். அவரை

உட்காரச் செய்து உபாத்தியாயர் அவரை நோக்கி "இவரைத் தங்களுக்குக் கூட நன்ருகத் தெரியுமே!" என்ருர்.

வந்தவர்:—ஓகோ! முண்டைக்கண்ணு முனுசாமி முதலியார் தானே! ஆகா! தெரியாமலென்ன நன்ருகத் தெரியும். இவருடைய புகழும் கீர்த்தியும் உலகமுழுதும் உலாவுகின்றனவே! அதிலிருந்து யாருக்குத் தான் இவரையறிய முடியாது. அடாடா! சென்ற வாரம் ஒரு முகூர்த்தம் நடந்ததே நமது ரெட்டியார் வீட்டில்; அது தமக்குத்தெரியுமோ இல்லையோ!" என்று இவர் பேசிக்கொண்டே இருக்கையில் தரகன் மெல்ல எழுந்து நழுவி விட்டான். அதைக் கண்ட உபாத்தியாயர் "என்ன! என்ன!! ரெட்டியார் வீட்டுக் கலியாணம் தான் நின்று விட்டதென்று கேள்விப் பட்டேன்; அதற்கென்ன! இந்த ஜகப்புளுகனின் சம்பந்தம் அங்கும் ஏற்பட்டதோ!" என்ருர்.

வந்தவர்:—ஐயோ! அதையேன் கேட்கிறீர்கள்? ரெட்டியாருடைய மகனுக்குத் தான் நல்ல பெண் பார்த்துக் கொண்டு வருவதாகக் கூறிச் சென்று ஓர் ஜாதகத்தைக் கொணர்ந்து கொடுத்தான். அதைப் பார்த்து மிகவும் பொருத்தமாயிருக்கிறதென்று கூறி முகூர்த்தமும் வைத்தாயிற்று. பையன் சென்னையில் B. L. வகுப்பில் படிக்கிருன். இக்கால நாகரிகப் படி பெண்ணின் புகைப் படத்தைப் பார்க்கவேண்டுமென்று பையன் பெற்ருேருக்குக் கடிதம் எழுதினுனும். பிள்ளை வீட்டார் தம் அபிப்பிராயத்தை அந்தத்தரகுக்காரனிடம் தெரிவித்தார்களாம். அவன் பெண் வீட்டாரிடம் சொல்லி ஒரு அழகிய பெண்ணின் படத்தை வாங்கிக் கொணர்ந்து கொடுத்தான். அவன் கொடுத்த படத்தைப் பிள்ளைக்கு அனுப்பினுர்கள். படம் நிரம்பவும் அழகாயிருந்தமையால் அதைக் கண்டு பையனும் சம்மத மென்று எழுதிவிட்டான். அப்படம் கலியாணப் பெண்ணுடையதோ, இன்னும் யாருடையதோ தெரியாது; ஈசனுக்குத் தான் வெளிச்சம்.

பிறகு கலியாணம் நெருங்கி விட்டது. பையனுடைய சிநேகிதர்களில் அனேகர் விவாகத்திற்கு வருவதாக வாக்குக் கொடுத்

திருந்தார்கள். கலியாணச் சடங்குகளெல்லாம் நடக்கின்றன. பெண்ணும் இயற்கையிலேயே ரூபவதியாகவே இருந்தாள். முகூர்த்தமாவதற்கு முன்னே பையனுடைய சிநேகிதர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். அவர்களில் குப்புசாமி என்பவன் வக்கிலாக இருக்கிறான். அவன் வந்தவுடன் கலியாண மாப்பிள்ளையின் பிதாவால் வரவேற்கப்பட்டு காலைப் போஜனமுண்டு பந்தலில் வந்து வதூவரர்களைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்தான். அவன் அந்த மணப் பெண்ணை உற்றுக் கவனித்தான். அவ்வளவு தான் அவனுக்கு அப்போது வந்த ஆவேசத்தை வர்ணிக்கவே சாத்யமன்று. ஒரே பாய்ச்சலாக எழுந்து அந்த மணப் பெண்ணைத் தர தரவென்று இழுத்துக் கன்னத்தில் பளீர்! பளீர்! என்று பத்து அறைவிட்டான். கலியாணப்பிள்ளையும் மற்றவர்களும் இந்த விசித்திரமான சம்பவத்தால் திடுக்கிட்டு என்னவென்று விசாரிக்கையில் அந்த வக்கீல் கூறியதாவது—

"இந்தப் பெண்ணுக்கு இப்போது இருபத்திரண்டு வயதாகின்றது; இவளுடைய பதினாறுவது வயதில் இவளை நான்மணம் செய்துகொண்டு என் வீட்டிற்கு அழைத்து வந்தேன். இவளுடைய குணமும் நடத்தையும் கேவலம் துன்மார்க்கத்தில் மாறிவிட்டன. அது கண்டு சகியாது இவளை இவளது பதினெட்டாவது வயதில் தள்ளிவிட்டு ஜீவனாம்சத்தைக் கொடுத்துப் பின் மறுமணம் செய்துகொண்டேன். இந்தக் கழுதை நான்கு வருடமாக எங்கிருந்ததென்பதுவும் எனக்குத் தெரியாது. இந்தச் சனியனை உனக்குப் பேசி நிச்சயித்த சண்டாளன் யார்? அவனை இதோ அதம் செய்து விடுகிறேன்" என்று வெகு உக்ரத்துடன் கூறுவதைக் கேட்ட தரகன் சொல்லாமல் கம்பி நீட்டி விட்டான். அவனைப் பற்றி போலீஸில் பிராது கொடுத்திருக்கிறார்கள். பெண் வீட்டார் மீது மான நஷ்டத்திற்காக 5000- ரூபாய்க்கும், மோசம்செய்ததற்காகக் க்ரிமினல் வழக்கும் தொடுத்திருக்கிறார்கள். பெண் வீட்டாரைச் சேர்ந்தவர்கள் சிலரே வந்திருந்தார்களாம். அவர்களை யெல்லாம் போலீஸார் காவலில் வைத்திருக்கிறார்களாம். இத் தரகன் வெகு யோக்கியன் போல இங்கு வந்து விட்டானே! இவனிருப்பிடத்தைப் போலீ

ஸாரிடம் தெரிவித்தாலும் இவனைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். படவாப் பயலல்லவா இவன்! கேவலம் மோசம் செய்யும் தொழிலையல்லவா கைப்பற்றிச் செய்துவருகிறான். ஆயிரங்காலத்து அழியாப் பயிராகிய விவாகத்தை இத்தர குக்காரப் பாவிகள் பாழ்படுத்தி அநியாயமான பொய் வார்த்தைகளை யெல்லாம் கூறி ஏழைகளைத் தனவந்தர்கள் என்றும், துர்க்குணமுடையவர்களை உத்தமமான நற்குணமுள்ளவர்களென்றும், அங்கஹீனர்களை தங்கம் போன்ற அழகுடையவர்களென்றும் வாய்க் கோட்டை கட்டி விவாகத்தை முடித்துப் பணத்தை வாங்கிப் பிழைக்கும் பிழைப்பும் ஒரு பிழைப்பா! இதை விட கௌரவமாக ஏதேனும் குமாஸ்தா வேலை செய்துப் பிழைக்கலாமே! கூலி வேலை செய்து பிழைக்கலாகுமே! தாயார் வீட்டில் செல்வாக்காக வளர்ந்த பெண்களை துஷ்டப் படுபாவிகளுக்கு ஒப்படைக்கச் செய்துப் பணத்தைப் பறித்துக்கொண்டு போய் விடுகிறான். அக் குழந்தைகள் புக்ககத்தில் படாத இம்சைகளையும் அனுபவிக்க நேருவதால் எத்தனை குடும்பங்களில் எத்தனை அல்லல்களும் விபத்துகளும் நடக்கின்றன! தாய் வீட்டில் மேன்மையாகவிருந்த பெண் குழந்தைகள் மாமி, மாமன், நாத்தி, கட்டிய கணவன் முதலிய பல பேர்களாலும் பல வித இம்சைகளுக்கு உள்ளாகும் சங்கடத்தைக் கூறச் சாத்தியமோ! சீதனம் செய்யவில்லை என்றும், வரதக்ஷிணை கொடுக்கவில்லை என்றும், தன் வீட்டுக் கடன் பூராவும் அடை பட்டுப் போவதற்காக 1000 ரூபாய் வைத்தால் தான் சாந்தி செய்வோம்; இல்லையேல் பெண்ணைத் தள்ளி விடுவதாகப்-பயமுறுத்தித் தள்ளியும் விட்டு தவிக்கச் செய்வதும் இன்னும் இது போன்ற எண்ணரிய கொடுமைகளைச் செய்து அப்பெண்ணை வருத்திச் சோறு போடாது தாய் வீட்டுக்குத் துரத்துவதும், இம்சையைச் சகிக்காது தானே உயிர் விட்டு விடுவதுமான விசித்திரங்கள் இத்தரகுக்காரப் பாவிகள் செய்துவைக்கும் விவாகங்களினால்தான் அனேகம் உண்டாகின்றன. இந்த மோசக்காரர்கள் செய்யும் விவாகங்களில் எங்கேயோ நூற்றிற்கு ஒன்றேனும் நன்றாகவும், வார்த்தைக்கு இடமின்றியும் ஒழுங்காகவும் அமைவது அதிசயந்தான். மோசமும் பித்தலாட்டமும் பணம் வரும் வழியை மட்

டும் கவனிப்பதில் நாட்டமாகவும் எதிரியின் க்ஷேமலாபங்களைக் கவனியாது செய்யும் தொழிலையுடையவர்கள் கொண்டுவரும் வரன் எவ்விதமிருக்கும்? எத்தனை கஷ்டங்களோ, மனஸ்தாபங்களோ முதலியவற்றை அனுபவித்தாலும் தரகுக்காரப் பாவிகளை மட்டும் நம்பி அவர்கள் கொண்டு வரும் வரனைக் கொள்ளவும் கூடாது; வரனுக்குக் கொடுப்பதும் கூடாது. நாமாகச் செய்து கொள்வதில் நேரும் சம்பவங்களை அனுபவிப்பது சகஜம். இதோ பாருங்கள்; ஒரு வார்த்தையை எடுத்தால் அதன் மூலம் பல வார்த்தைகளும் விஷயங் களும் நினைவிற்கு வருகின்றன.

சாதாரண தனவந்தர் ஒருவருக்கு 5, 6 பெண்குழந்தைகள் இருந் தனர். இந்தப் பாவி அங்கு அவரிடம் சென்று தட புடலாகப் பேசி 'ஓர் உயர்தரமான வரன் இருக்கின்றது. அதை முடித்துவிடு வோம்'' என்று அவரை மயக்கிவிட்டுச் சென்று பெண் வீட்டில் தான்எல்லாவற்றையும் நிச்சயித்துவிட்டதாகப் பிள்ளை வீட்டில் கூறி முகூர்த்தம் வைத்துவிட்டான்.

கலியாணத் தன்று பிள்ளையும் பெண்ணும் மணையில் உட்கார்ந் தார்கள். வாத்தியார் ஏதோ மந்திரம் சொல்லி—ஏதேதோ அச்சட ங்குகள் இல்லையா! அவைகளைச்செய்யும்படிக் கூறினாராம். கலியாணப் பிள்ளை உட்கார்ந்த விடம் விட்டு அசையாமலும், எதையும் செய்யா மலும் உட்கார்ந்திருந்தது கண்ட வாத்தியார் "உம் இந்த நெய்யை எடுத்து அக்னியில் ஆஹுதி செய்யும்'' என்று அருகில் உட்கார்ந்த வாறு கூறினாராம். அக் கலியாண பிள்ளைக்கோ காது செவிடாம். அதை யாரு மறியமாட்டார்கள். வாத்தியார் கூறிய வார்த்தையில் நெய்யை எடுத்து என்பது சற்று உரக்கக் கேட்டது போல விருக் கின்றது. உடனே பையன் கிண்ணத்திலிருந்த நெய்யை எடுத்து மட மட வென்று குடித்துவிட்டானும்.

இந்த வயிற்றெரிச்சலைக் கண்ட தோழி மாப்பிள்ளை ஏதோ சைகை செய்து அதை மறைத்துவிட்டு வாத்தியாரையும் அடக்கி விட்டானும். நல்லவேளையாக இதை அதிகமாக யாரும் கவனிக்க வில்லையாம். கவனித்த சிலருக்கு மாப்பிள்ளை நெய்யின்

ருசி பார்த்ததாகக் கூறிவிட்டானும். பிறகு வாத்தியாருக்கு இவன் செவிட்டுச் சாமன் என்பது விளங்கி விட்டதாம். தாம் ஏன் அதை வெளியிட வேண்டும் என்று எண்ணித் தான் மந்திரத்தையே உரக்கக் கூறுவது போல கூறிக்கொண்டே "செம்பு ஜலத்தை தொன்னையில் சேர்க்கணம்" என்ருர். செம்பு ஜலம் என்பது காதில் பட்டதும் பையன் அதை எடுத்து "அப்பா! புகைந்துப் புகைந்து கண் அவிந்துவிட்டது; எப்போது சொல்வீர்களென்று பார்த் தேன்," என்று கூறியவாறு அக்னியில் கொட்டிவிட்டானும். வாத்தி யார் செம்பு ஜலத்தை தொன்னையில் சேர்ப்பது; பெண்ணின் கை யைப் பிடிப்பது" என்று வரிசையாகச் சொல்லி முடிக்கு முன் மாப் பிள்ளை செம்பு ஜலத்தை அக்னியில்சேர்த்தான்; பெண்ணின் கையை எடுத்து வாயில் வைத்து வெடுக்கென்று கடித்து விட்டானும்.

இவன் கூரிய பற்களால் விரல் துண்டித்து விடும்படியாகக் கடித்துவிட்டதனுல் வலியைத் தாங்கமாட்டாத பெண் "ஐயோ! அம்மா! போய்விட்டேன்! போய்விட்டேன்! இத்தகைய செவிட்டை நான் கட்டிக்கொண்டு வாழ்வதை விடக் கிணற்றில் விழுந்து இறந்து விடுகிறேன். தாருக்காரப் பாவி நாசமாய் போக! எங்கே அந்தச் சண்டாளன்!" என்று வீறிட்டுக் கத்திக்கொண்டே மணையை விட்டு எழுந்து ஓடி விட்டதாம். இந்த அலங்கோலக் கலியாணத் தையும், செவிட்டு மாப்பிள்ளை என்பதை யறிந்து அவன் செய்த செய்கைகளையும் கண்ட எல்லோருக்கும் வந்துவிட்டது கோபம். மாப்பிள்ளையை தடார் புடார் என்று சாத்துமுறை செய்யத் தொடங்கிவிட்டதுடன் அங்கு ஓடிப் போக யத்தனித்த தரகனை தூணில் கட்டி வீறிவிட்டார்கள். பின்னர் சிலர் ஐயோ பாவம் என்று சிபார்சு செய்து அவனை விடுவிக்கச் செய்தார்கள். விவாகத்தில் நஷ்டமும் மானக் கேடும் நேர்ந்ததுதான் இப் பாவிகளால் உண்டான நன்மை. இவர்களைக் கொண்டு விவாகம் செய்வதை விடப் பெண்களையும் பிள்ளைகளையும் பேசாதுவைத்துக்கொள்ளலாமென்று தோன்றுகின்றது! நல்ல வேளையாகத் தாங்கள் ஒப்புக்கொள்ளாது மறுத்தீர்களே! ஏதேனும் ஓர் உபயோகமற்றதை உம்முடைய காலில் கட்டி விட்டு உம்மையும் அவதிக்கு ஆளாக்கிவிடுவான்.

அவன் தேடித் தராவிட்டால் நீர் விவாகம் செய்து கொள்வது நின்றுவிடுமா என்ன? உமக்கு விவாகம் செய்துகொள்ள வேண்டுவது மிகவும் அவசியமானதேயாம். ஆகையால் நீங்கள் தானாகவே ஒரு பெண்ணைத் தேடி மணந்துகொள்ளுங்கள். மணம் செய்து கொள்ளாவிட்டால் உமக்கு மறு திக்கு எவருமில்லை யல்லவா? ஒரு துணைவி இல்லாது உமது கடைசிக் காலம் வரையில் எவ்விதம் முடியும்? தனக்கென கனிகரத்துடன் பணி செய்வதற்கு மனைவிக்குச் சமானம் தாயாருக்குப் பின்னர் ஒருவரும் ஆகமாட்டார்கள். தாங்கள் இவ்விதம் ஒரே பிடிவாதமாக இருப்பது சரியல்ல. இந்த விசனத்திலேயே மூழ்கி விட்டால் என்ன செய்யலாம்? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் வரப்போவதில்லை. என்ன செய்யலாம்? அந்த உத்தமிக்குச் சமதை யவர்கள் தான். அவர்களைப் பறிகொடுத்து விட்டது மெத்த துயரமாகவும் சகிக்கக்கூடாததாகவும் தான் தோன்றும். கைவிட்டுப் போய்விட்டதைக் குறித்து இனிக் கவலைப் பட்டு ஆவதென்ன இருக்கிறது! இனிமேல் நடக்க வேண்டுவதையும் கவனித்தால் தான் நலம்'' என்று நிரம்பவும் விசனத்துடனும் சந்தோஷத்துடனும் கூறிவிட்டு ''ஆகா! தாகனின் அத்புதமான செய்கையாகிய மகிமையைக் கூறிக்கொண்டிருந்ததில் பொழுது செல்வதும் தெரியவில்லை. யான் சென்று வருகிறேன்'' என்று கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்.

வாத்தியாருக்கு வேண்டியவர்களெல்லோரும் அவரை மணம் செய்துக் கொள்ளும்படி சதா உபதேசம் செய்து அவருடைய மன வேதனையை எத்தனையோ விதமான சம்பாஷணையினாலும், அரிய விஷயங்களைக் கூறியும் ஆற்றிக்கொண்டே வந்தார்கள்.

தாஞ்சாபகதூர் என்கிற பெயர் நாளா வட்டத்தில் மாறிக் கொண்டேவந்துவிட்டது. சிதம்பரம் என்ற பெயருக்கு உடைத்தானவனாக ஆகிவிட்டான். அவன் தனது தாய் தந்தையர்களையும், உடன் பிறந்தோர் முதலியவர்களையும், தனது ஜனன பூமி இந்த விடம் என்பதையும் அடியோடு மறந்துவிட்டான். குருவும் குரு பத்னியுமே தனக்கு பிதா மாதா என்று எண்ணிவிட்டான். அவர்கள்

மீதே தன் உயிரைவைத்துவிட்டபடியால் அவனுக்கு அவர்களிடமே சகல விதமான பாசங்களும் ஏற்பட்டு விட்டன. சிதம்பரத்தின் அறியாமை நீங்கி அறிவு நன்ருக விருத்தியாய் விட்டதைக் கண்ட உபாத்தியாயர் அவனை ஆங்கிலத்தில் நன்ருகப் பயிலும்படியாக அடுத்த ஊரிலிருக்கும் ஆங்கிலக் கல்லூரியில் மெட்ரிக்கு லேஷன் வகுப்பில் கொண்டுபோய்ச் சேர்த்தார். அதுவரை யில் உபாத்தியாயர் தமக்குத் தெரிந்தமட்டில் ஆங்கிலத்தையும் நன்ருகப் பயில்வித்திருந்ததால் சுலபமாக அவனைகல்லூரியில் எடுத் துக்கொண்டார்கள்.

இவ்விதமாகவே சில வருடங்களாயின. உபாத்தியாயருக்கு எல்லோரும் விடாது விவாகத்தைச் செய்துவைக்கவே முனைந்து பாடுபட்டுக் கூறியதனுல் அவரும் பிற்காலத்தை எண்ணி விவாகத் திற்கு இசைந்தார். பிறகு ஒரு பெண்ணைத் தேர்ந்து எடுத்து விவாகத்தை முடித்தார். அந்தப் பெண் 16 வயதைக் கடந்த பெரிய பெண்ணுகையினுல் விவாகமானவுடனே தன் தாயாருடன் வீட் டுக்கு வந்துவிட்டாள். அவளுடைய தாயாருக்கு அவள் ஒரே பெண்ணுகையினுலும் அவ்விடத்தில் நிரம்பவும் ஏழ்மை குடி கொண்டிருப்பதாலும் தாயாரையும் தன்னுடனேயே அழைத்துக் கொண்டாள். தனக்குச் சமதையாக வில்லாமல் ஏழையாகப் பார்த்து மணந்துகொண்டால் தனக்கு அடங்கிய சரக்காயும் தன் குழந்தையைக் கவனித்துக் கொள்வாள் என்றும் எண்ணிய உபாத்தியாயர் ஏழையான பெண்ணையே மணந்தார்.

தாயும் மகளும் வீடு வந்து சேர்ந்த பிறகு சிதம்பரத்திற்குச் சமயல் வேலை முதலில் குறைந்தது. நமது சிதம்பரம் சாதாரண மாக இயற்கையிலேயே நல்ல அழகு வாய்ந்தவனுக விருப்பினும் முன்பு அவனுடைய அறியாமையினுலும் மூளை யற்றுச் செய்த செய்கைகளின் பயனுலும் முகத்தில் சுரு சுருப்புத் தன்மை யற்று பைத்தியம் போலக் காணப்பட்டதெல்லாம் அவன் நல்ல அறிவைப் பெற்றுப் படிப்பின் அபிவிருத்தியினுல் பகுத்தறிவும் மேன்மையான உன்னத குணமும் உண்டாகிவிட்ட தக்ஷணமே அவனுடைய மங்கிக் கிடந்த-சாணை பிடிக்கப்படாத கமலம் போலக் கிடந்த—எழி

லானது கல்வி என்னும் சாணையினுல் புத்தியாகிய கமலத்தைப் பிரகாசிக்கச் செய்தவளவில் அதன் காந்தி மூலமாக அவனுடைய அழகெல்லாம் மேல் தூக்கி மன்மதனையும் வெல்லக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது.

இதற்கு முன் சிதம்பரத்தைக் கண்டவர்களுக்கே அவனுடைய தற்போதிய நிலைமையில் அவனைத் தெரிந்து கொள்ளக் கூடாத விதமான ரூபலாவண்ய சுந்தரனுக அவன் மாறிவிட்டான். இப்போது அவனுக்கு வயது 22 நடக்கின்றது. அவனை உபாத்தியாயரிடம் ஒப்புவித்த பொழுது 10 வயதும் நிரம்பப் பெறுதவனுகவிருந்தான். பன்னிரண்டு வருஷகாலமாக இவ்வுபாத்தியாயரின் அரிய போதனு பயிற்சியினுலும், அவரது பத்தினியாகிய அன்னையினும்சிறந்த அன்புடைய நங்கையாரின் அன்பு கனிந்து ஊட்டிய அமுதத்தின் பயனுலும் அவனுடைய அறியாமை என்னும் இருள் மறைந்து அறிவென்னும் ஆதித்தன் உதயமாகிவிட்டதுவும் அவனுடைய பூர்வ ஜன்மாவின் பலனேயாம். சிதம்பரம் நல்லறிவைப் பெற்ற விநோதத்துடன், தெய்வ பக்தியும், தயாள குணமும் உன்னதமான பரிசுத்த மனமும் உடையவனுகவும், குருவிடத்தில் பய பக்தி விச்வாசத்துடன் நடப்பதை மறவாதவனுகவும் ஆய்விட்டான்.

குருவின் பத்தினியார் இறக்கும் தறுவாயில் தனது ப்ராண நாதனை நோக்கி "நாதா! சிதம்பரத்தின் அறியாமையை முற்றும் நான் கண்டு அனுபவித்தேனே யன்றி அவன் நன்றுக வரும் தருணத்தில் அவனுடன் இருந்து அனுபவிக்க நான் பாக்கியம் செய்யவில்லை. சிதம்பரத்தைத் தாங்கள் எக்காரணம் பற்றியும் விலக்கவேண்டாம். அவனை தாங்கள் சொந்த பிள்ளையாகவே பாவித்து வரவேண்டும். அவன் அநாதைச் சிறுவன். நம்மையே நம்பியவன். பெற்ற மாதா பிதாக்களை அறவே மறந்து நம்மையே கதியாகக் கொண்டவனைக் கைவிட வேண்டாம். தாங்கள் ஏமாவதியை யொரு கண்ணுகவும் சிதம்பரத்தை யொரு கண்ணுகவும் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் நல்ல உத்தமமானகுணமுடைய பெண்ணைப் பார்த்து மணஞ் செய்துக்கொள்ளுங்கள். இளையாளின் வலையில் விழுந்து குழந்தைகளை மறந்துவிடப் போகி

ரீர்கள். நிராதரவான சிதம்பரத்தை மறக்காதீர்கள்; மறக்கா தீர்கள். அவனே எனது உயிரான குழந்தை. நான் மட்டும் உயிரோடிருந்தால் எத்தனையோ விதம் யோசித்திருந்தேன்; அவ்விதமெல்லாம் செய்து பார்ப்பேன். அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை; எனினும் என் ஆத்மா சாந்தி யடையும்படியாக எனது எண்ணத்தைத் தாங்களே நிறைவேற்றிவிடுங்கள். அதையே நான் வேண்டுகிறேன். என் செல்வச் சிதம்பரத்திற்கு நமது ஏமாவதியை விவாகம் செய்துக் கொடுத்துவிடுங்கள். அதைத் தான் நான் செய்துப் பார்க்க எண்ணினேன். ஈசன் என் ஆசை யையேனும் நிறைவேற்றட்டும். நாதா! என்னிஷ்டப்படி செய்வீர் களா! எனக்கு உறுதியாகக் கூறுங்கள். என்னுள்ளம் மகிழும்படி யாக எனது கோரிக்கையை மட்டும் செய்துவைத்து விடுங்கள். நாதா! செய்கிறீர்களா! உறுதியாகச் சொல்கிறீர்களா?'' என்று பேச மாட்டாமல் திணறித் திணறி வேண்டிக்கொள்ள அவர் தாங்க மாட்டாத விசனத்துடன் அவ்விதமே செய்வதாக உறுதிமொழி யளித்தார். பின்னர் அவள் சிதம்பரத்தை நோக்கி, "என் னப்பனே! சிதம்பரம்! என் செல்வச் சிதம்பரம்! என் கண் ணான குழந்தாய்! உன்னை முழுதலைக்கும் ஆதரித்து அன்ன மூட்டி என் பெண்ணை உனக்கு மணம் சூட்டி என் கண்ணாரக் கண்டு களிக்க எண்ணி யிருந்தேன். நீ நன்றாக ஒழுங்குபட்டு வரும் நாளில் வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்தது போல என் முடிவு நேர்ந்துவிட்டது. இனி நான் பிழைக்க மாட்டேன். உன் பொருளாகிய ஏமாவதியைக் கைவிடாதே. உலகத்தின் அனுபவத்தை நீ சிறிது மறியாய்! இனிமேல் எல்லாவற்றையும் அறிந்துகொள். உனது குரு இளைய மனைவியை மணந்துவிட்ட பின்னர் எப்படியும் மாறித்தான் போவார். இது உலக வழக்கம்; அவருக்கு மட்டு மல்ல. ஆகையால் அவர் ஒருகால் அந்த மாதிரி யான நிலைமைக்கு வந்தபோதும் நீ ஏமாவதியை மணம் புரிவதை மறக்காதே; அவளைக் கைவிடாதே! அவளுடைய பொறுப்பு இனி உன்னைச் சேர்ந்துவிட்டது. அப்பா சிதம்பரம்! நான் கூறிய வற்றை செவியில் வாங்கிக்கொண்டாயா! அவ்விதம் செய்கிறாயா! எனக்கு உறுதிமொழி கூறு." என்று அவனை அருகி லழைத்துத்

தடவிக்கொடுத்தாள். கண்ணீர் பெருகிய வண்ணம் அவ் வுத்தமி கூறிய மொழிகள் சிதம்பரத்தின் மனத்தில் பதிந்து போய் வேரூன்றி விட்டன. தன்னை வேண்டிக்கொண்டபடியே குரு பத்னிக்கு வாக்குறுதி யளித்து அன்று முதல் தனது உபாத்தியாய ரையும் ஏமாவதியையும் தன் கண்களைப் போலப் பாதுகாத்து வருகிறான். இளையாள் வந்துவிட்டதும் 'நமது சிதம்பரம் இறந்து விட்ட அம்மாளைப்போலவே அவளையும் பாவித்து அந்தம்மாளிடத் தில் எவ்விதம் பய பக்தி விசுவாசத்துடன் இருந்தானோ அதே மாதிரியாக இருக்கத்தொடங்கினான். அந்தம்மாளைப் போலத் தான் இளையாளுமிருப்பாள் என்ற நம்பிக்கையையே அவன் மனத்தில் எண்ணி இருந்தான்.

இளைய மனைவியும் அவளுடைய தாயாரும் வீட்டிற்கு வந்த வளவிலேயே வீட்டில் சகலமான பெருதனமும் அவர்களுடைய தாகவே ஆய்விட்டது. வீட்டில் ஒரு எருமை மாடும் ஒரு பசு மாடும் பால் கறக்கின்றன. இளையாளின் தாயார் அப் பாலைக் கறந்து எருமைப் பாலைத் தயிராக்கி விற்றும், பசுவின் பாலைக் காய்ச்சித் தன் மகளுக்கும் மருமகப் பிள்ளைக்கும், முதலில் சில தினங்கள் ஏமாவதிக்குமாகப் பங்கிட்டுக்கொடுத்தும் வந்தாள். இறந்துபோன அம்மாள் முதலில் சிதம்பரத்திற்குப் பாலைக் கொடுத்த பின்னரே தான் மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள். இந் தம்மாளின் தர்பார் நடக்க ஆரம்பித்த பிறகு சிதம்பரத்திற்குப் பால் தபாலாக ஆய்விட்டது. உபாத்தியாயர் சிதம்பரம் வழக்கம் போலவே பால் சாப்பிடுவதாக எண்ணி யிருக்கிறார். சிதம்பரத்தை "அப்பா! பால் சாப்பிட்டாயா?" என்றால் சிதம்பரம் வீட்டுச் செய்தி யைக் கூறாது சாப்பிட்டதாகவே கூறி வந்தான்.

இளைய மனைவிக்கு மட்டும் சிதம்பரத்திற்குப் பால் கொடுக்கச் சம்மதந்தான். அவள் தாயார் ஏமாவதிக்குக் கொடுப்பதையும் தடுக்கத் தலைப்பட்டாள். பின்னும் சில மாதங்களாயின. பசுவின் பாலை அப்படியே விற்கவும் தொடங்கி விற்றுவிடுவதும், பால் மறத்துவிட ஆரம்பமாகிவிட்டது; பால் அதிகமாகத் தருவதில்லை என்ற சொல்லைக் கிளப்பிவிட்டு ஏமாவதிக்குப் பால் கொடுத்து வந்த

தையும் நிறுத்திவிட்டாள். வீட்டில் எத்தகைய விஷயங்கள் நடப்பினும் அவைகளைச் சிதம்பரம் கவனிப்பதுமில்லை. அதவா தப்பி காதில் படுவதையும் உபாத்தியாயரிடம் உரைக்காது வாளாவிருந்து தன் காரியத்திலும் படிப்பிலுமே கவனமாக விருப்பான்.

ஏமாவதிக்கு அப்போது வயது 12 ஆகியும் அவள் சிறிய குழந்தையைப் போல தன் தாயை எண்ணி சதா துக்கித்துக் கொண்டு கலங்குவாள். அவள் புலம்பும் நேரத்திலெல்லாம் சிதம்பரம் அவளைத் தேற்றிப் பலவிதமான அரிய மொழிகளைக் கூறி அவளுடைய துயரத்தை ஆற்றுவான். இவ்விதமே நடக்கையில் ஒரு தினம் ஏமாவதி பால் பல்லாவைத் துலக்கும்போது கை தவறி அது கீழே விழுந்து உடைந்துவிட்டது. ஏமாவதிக்கு சிறிய தாயார் வந்த நாள் முதலாக அவளால் சிறுகச் சிறுக கொடுமைகள் நடக்க வாரம்பித்துவிட்டன. ஏதேனு மொரு சாக்கு அகப்பட்டு விடுமாயின் அதை வைத்துக்கொண்டு குழந்தையை கடுகடுத்துப் பேசுவாள். உபாத்தியாயரும் தன்னாலானவரையில் வீட்டில் தனது குழந்தைகளுக்கு ஒருவிதமான கஷ்டமும் நேரா வண்ணம் பார்த்துக்கொண்டு தான் வருகிறார். எனினும் இளையாளின் தாயார் சாதாரணமான மனித குணமென்பதே அற்றுப் பேய்க் குணம் கொண்டவளாக விருப்பதால் அவளுடன் மானத்தை விட்டுப் பேசவும் உபாத்தியாயர் சற்று நடுங்கி தர்ம சங்கடத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறார்.

ஏமாவதி பால் பல்லாயை உடைத்துவிட்ட பயத்தினால் பின்புறத்து தோட்டத்தில் சென்று உட்கார்ந்துகொண்டு கோவெனக் கதறித் தேம்பித் தேம்பி அழுதுக் கொண்டிருந்ததைக் கண்ட சிதம்பரம் ஒன்றும் தோன்றாமல் மனம் கலங்கியவாறு அவளருகில் சென்று வெகு வாஞ்சையுடன் அவளைத் தூக்கி தன் மடி மீது கிடத்திக்கொண்டு, "ஆகா! ஏமாவதி! ஏனம்மா! இவ்விதம் கதறுகிறாய்! உனக்கு என்ன நேர்ந்தது? அல்லது வழக்கம் போலத் தாயாரை எண்ணிக் கலங்குகின்றாயா? என்ன காரணம் சொல்லம்மா!" என்று வெகு கனிந்த ப்ரேமையுடன் கேட்டான்.

அன்று தனக்குப் பெருத்த போதாத காலமிருப்பதைக் காட்டுவதற்கே பால் பல்லாய் உடைந்து விட்டது என்றதை தினம் தான் அனுபவிக்கும் அனுபவ ஞானத்தினல் உணர்ந்து கொண்டு நடு நடுங்கிப் புலம்பும் ஏமாவதி சிதம்பரத்தின் அன்பு நிறைந்த உபசாரத்தையும்,ப்ரேம பூர்வமாய்க் கனிந்த வாஞ்சையுடன் கேட்ட மொழிகளேயும் கேட்டு முன்னிலு மதிகமாகவும், தனது நிலைமையை எண்ணி அபாரமான சோகத்தைத் தாங்கமாட்டாமலும் "ஹா! மாமா! நான் என்ன செய்வேன்? எனக்கு இன்று ஏதோ பெருத்த போதாத காலம் வந்துவிட்டதே! வழக்கம் போல பால் பல்லாவைத் தேய்த்துக் கொண்டிருக்கையில் அது கைத் தவறி விழுந்து உடைந்துவிட்டது. அதனுல் சிற்றம்மையின் தாயாருடைய வசைகளுக்கும் சிடு சிடுப்பிற்கும் ஆளாகி என்னென்ன அவஸ்தைப் படவேண்டுமோ தெரியவில்லேயே! அதற்குத் தான் புலம்புகிறேன்" என்று வெகு துயரத்துடன் தேம்பியழுதவாறு கூறிஞள்.

இதைக் கேட்ட சிதம்பரத்திற்கும் சற்று வருத்த முண்டாகி விட்டது. அவன் தன்னுடைய வருத்தத்தை அடக்கிக்கொண்டு பேசத் தொடங்கி "அம்மா! ஏமாவதி! இதற்காகவா அழுகின்ருய்! இதோ இப்போதே நான் சென்று ஒரு புதிய பல்லாய் வாங்கித் தருகிறேன். அதை நானே உடைத்து விட்டதாக அவர்களிடம் கூறி புதிய பல்லாயை நானே நேரில் கொடுத்து விடுகிறேன். எல்லாம் கால வித்யாசத்தின் கோலம்" என்று வெகு கனிவுடன் கூறி அவளேத் தேற்றிப் பின்னர் கடைக்குச் சென்று புதிய பல்லா ஒன்று வாங்கிக் கொண்டு வருவதாகக் கூறிச் சென்று விட்டான்.

ஏமாவதியின் இளைய தாயாராகிய மனேன்மணியம்மாள் மறைவிலிருந்தபடியே ஏமாவதி பால் பல்லாயை உடைத்து விட்டதையும், அதனுல் புலம்பியதையும், சிதம்பரம் அவளேத் தேற்றிக் கடைக்குச் சென்றிருப்பதையும் கவனித்துக் கொண்டிருந்தாள். சிதம்பரம் எழுந்து சென்றதும் மனேன்மணியம்மாள் ஏமாவதியின் எதிரில் வந்து சற்று கடுத்த முகத்துடன் "ஏண்டி, ஏமா! ஏன் இன்னும் சாகஸம் செய்கிருய்? உனக்குத் தான் புதிய பல்லாவை வாங்கித் தருவதுடன் தானே உடைத்ததாகப் பழியையும்

தன் மீதே சுமத்திக் கொள்வதாக உனது மாமா-மாமாவாம்; மாமா முறையைப் பாரு-வெகு கனிகரத்துடன் கூறிச் சென்றிருக்கையில் இன்னும் என் அழுகிறாய்? நீ செய்யும் காரியங்களை எல்லாம் இவ்வி தம் கோணக் காரியங்களாகச் செய்துவிடுவதுடன் அதற்காக பெரிய வர்கள் ஏதேனும் கேட்டால் அதை நன்மையாக மதிக்காது உன் னைக் கொன்றுவிட்டது போலக் கருதிப் புலம்புவதும், மாமா விடத் திலும் தந்தையிடத்திலும் கோள் சொல்லிக் கொடுப்பதுமான துண் டுணிக்காரியத்தைச் செய்து வருகிறாய்! இப்போது பழகி ஆண்டு வந்த பல்லாய் போய் விட்டதே! இனிமேல் புதிய பல்லாயை எடுத்துக் கொண்டு அதில் பாலைக் காய்ச்சினால் மண்வாசனை வருவ துடன் பாலையும் குறைத்துக் கொண்டு இழுத்துக் கொள்ளுமே! அதைப் பழக்கிப் பால் காய்ச்சும் வரையில் வேறு பித்தளைப் பாத் திரத்தில் காய்ச்சி புறைகுத்தினால் அது நன்றாகத் தோய்ந்து வெண் ணெய் கிளம்பாதே! இவை எல்லாம் நஷ்டந்தானே! சிதம்பரம் ஜம்பமாக பல்லா வாங்கி வருவதாகச் சொல்லிச் சென்று விட் டானே! அவனுக்குப் பணம் ஏது? அவனுடைய அப்பன் சம்பா தித்தானு அல்லது அவனே சம்பாதித்துக் கொண்டு வந்து விட்டானே! கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையா ருக்கு உடைப்பதே போல இவன் யார் உனக்குப் பரிந்து உபசரிக்க வந்து விட்டான்? உன் அப்பனின் காசைக் கொண்டு இவன் பல்லா வாங்குவதற்கு மிகுந்த கஷ்டத்துடன் சென்று விட்டான் போல விருக்கிறது! செக்குலக்கையைப்போல வீட்டில் தண்டபிண்டம் கொட்டிக் கொள்வது போதாதென்று இவ்விதமும் செலவு செய்ய வந்து விட்டானே! நல்லது" என்று அவள் கர்ஜனை செய்வது போலக் கூக்சலிட்டுக் கொண்டே இருக்கையில் அவளுடைய தாயார் அங்குத் தோன்றினாள். அவளும் செய்திகளை யறிந்துகொண்டு பெருத்த நஷ்டம் ஏதோ கண்டு விட்டது போல ஆக்ரோஷத்தை யடைந்து "ஓகோ! பால் பல்லாவையா வாங்கி யளிக்கச் சென்று விட்டான்? ஏதோ வீட்டில் பெண் பிள்ளைகள் பெண் குழந்தைகளின் நன்மை தீமைகளை அறிந்து அவைகளுக்கேற்றவிதம் புத்தி புகட்டிக் கண் டித்துச் சீர்பெறச் செய்ய முன்வந்தால் அவைகள் உங்களுக்கு வசையாக ஆகின்றனவோ! பேஷ்! அந்த அநாதை நாயை யார் கேட்

டது. அவன் தான் இவளுக்கு முக்கிய மனிதனே! ஏண்டி! ஏமா! உனக்கென்ன கொடுமையடீ நாங்கள் செய்கிறோம்? அவைகளை எல்லாம் தினம் தினம் நீ பூமிதேவியைப் போல பொறுமையுடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறாயோ பாவம்! தாயைத் தொலைத்துத் தலை முழுகி விட்டுக் கிடக்கும் கதி கெட்ட உனக்கு நன்மையைப் போதித்துத் தீமையைக் கண்டித்து நல்வழியடையச் செய்வதெல்லாம் வசைகளாக ஆய்விட்டனவா! ஆமடீ! அவ்விதம் தானிருக்கும். ஊர்பேரறியாத ஓர் அல்ப அனாதை மனிதன் உனக்காக சரியான வகாலத்து வாங்கிக்கொண்டதாக எண்ணி இறுமாப்புடனிருக்கிறாயோ! இப்போதிலிருந்து இவ்விதமான கர்வத்தை அடைந்து விட்டால் நன்றாக நீ முன்னுக்கு வந்துவிடுவாய்!" எனறு வைதுக் கொண்டிருக்கையில் சிதம்பரம் திரும்பி வந்துவிட்டான். சற்று தூரத்திலிருந்தவாறே இங்கு நடக்கும் விஷயங்களைக் கேட்டு மனம் புழுங்கியவாறு அவர்களின் எதிரில் சென்று வந்தனம் செய்துப் பின்னர் அவர்களை நோக்கி "அம்மணி! தாய்மார்களே! தாங்கள் கூறுவதே போல யான் உங்களுக்கு அநாதையாகத் தோன்றுகிறேனே யன்றி என் வரையில் நான் அவ்விதம் எண்ணவில்லை. நீங்களெல்லோரு மிருக்கையில் யான் ஏன் அநாதையாவேன்? தாயே! குழந்தை ஏதோ கைத்தவறுதலாக உடைத்து விட்டதை நீங்கள் மன்னிக்க வேண்டும். இதோ புதிய பல்லாவைக் கொண்டுவந்து விட்டேன். தாயற்ற பரதேசிகள் மீது உங்களைப் போன்றவர்கள் இரக்கம் காட்டாவிட்டால் வேறு யார் துணை செய்வார்கள்?" என்று இவன் பேசி முடிப்பதற்குள் மனோன்மணி சிதம்பரத்தை ஏற இறங்கப் பார்த்தாள். சற்று நேரம் ஒன்றும் பேசாது வாளாவிருந்தாள். பின்னர் ஏதோ யோசித்த வண்ணம் தன் தாயை அதட்டி இழுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள்.

ஏமாவதி அப்போதும் கோ வெனக் கதறியவாறு "ஆகா! மாமா! நான் என்ன செய்வேன்? என் தாயார் ஏன் என்னை விட்டு உயிர் துறக்கவேண்டும்? அவர்களிருந்தால் நீங்கள் இவர்களிடம் இத்தகைய வார்த்தைகள் கேட்கவும் கோபத்திற்கு இலக்காகவும்

நேருமா! ஆ அம்மா! எங்களை இவ்விதம் பரதேசிபோல விட்டுவிட்டு ஏன் சென்றுவிட்டாயம்மா!" என்று வழக்கம்போல தாயை எண்ணிக் கலங்க ஆரம்பித்தாள்.

இது கண்ட சிதம்பரம் "அம்மா! ஏமாவதி! உனக்கு எத்தனை தரந்தான் கூறிடினும் அவைகளை மறந்து மீண்டும் துயரப் படுகின்றாயே! இது உனது அறிவுக் கழகாமோ! நாம் முற்பவத்தில் செய்த வினையை தற்போது அனுபவிக்கின்றோம். அதற்காக வருந்தினால் பயன்றுனுண்டோ! ஏமாவதி! என்னுடைய அறியாமை என்னும் அந்தகாரத்தில் யான் சிக்கி யுழன்ற காலத்தில் ஓர் மகான் "காக்காயா? அரி! அரி" என்று எனக்கு உபதேசம் செய்த அவ்வரிய மொழிகளின் அம்ருதம் போன்ற உள்ளுரையை அறிந்த பின்னர் அம்மொழிகளை இடைவிடாது, சதா! "காக்காயா! அரி அரி! பாஞ்சாலி ரக்ஷகா! கருணையங் கடலே காத்தருள் செய்வாய்" என்றவற்றை மந்திரமாக மதித்துச் சதா ஜபித்துக்கொண்டே வருகிறேன். அந்தப் பரமன் நம்மை பராமரிக்க மாட்டான். மாண்டவர்களை எண்ணி வருந்துவதில் பயன் யாது? இனிமேல் நம்முடைய ஜிவியத்தில் நாம் நற்க்ருத்யங்களைச் செய்து நன்மை யடைந்து அக்கடவுளின் முக உல்லாசத்திற்குப் பாத்திரமாகும் வழியில் நமது கவனத்தைச் செலுத்தவேண்டியதே யன்றி வீணாக இந்த அல்ப விஷயங்களுக்கெல்லாம் வருந்திக் கண் கலங்குவது நன்றாக வில்லை. எழுந்திரம்மா ஏமா! என் செல்வ மல்லவா நீ! என் வார்த்தையைக் கேட்பாய் கண்ணே!" என்று கூறி அவளைத் தேற்றித் தூக்கி யுட்காரவைத்து அவளுடைய கண்ணீரைத் துடைத்து "கண்மணி! ஏமாவதி! நீ இன்னு மிவ்விதம் புலம்பினால் நான் என்ன செய்வேன்? வேண்டாமம்மா; வருந்தாதே!" என்று நிரம்பவும் வாஞ்சையுடன் கூறினான்.

அத்தருணம் மனோன்மணியின் தாயார் பின்னும் அவ்விடத்திற்கு திடீரென்று வந்து "ஆகா என்ன! என்ன!! அட அநியாயமே! கண்ணும்; கண்மணியாம்; செல்வமாம். இதென்ன அக்ரம மடீ! அடி மனோன்மணி! அநியாயமாய் குடி கெட்டு விதிபோல விருக்கிறதே!" என்று ஒரே கூச்சலிட்டுக் கத்தியவாறு ஏமாவதியை

சிதம்பரத்தின் கைப் பிடியிலிருந்து தர தர வென்று இழுத்து "அடீ! துஷ்டக் கள்ளி! இதற்குள் உனக்கு இந்த துணியும் பிறந்து விட்டதா!" என்று பல்லைக் கடிக்கக் கோபத் தீயினால் தகிக்கப் பட்ட அவளது கை ஏமாவதியின் கன்னத்தில் சென்று திருக வாரம்பித்தது. இந்த எதிர்பாராத அநியாயச் செய்கையைக் கண்ட ஏமாவதியும் சிதம்பரமும் திடுக்கிட்டு "ஆ ஈசா! காக்காயா! அரி அரி!" என்று தமக்குள் எண்ணியபடியே நின்றுவிட்டார்கள்.

RADHAMANI

("HINDU" 20—2—1929.)

This is a very interesting Tamil novel written by one who has already made a name by the publication, in the monthly 'Jaganmohini' of other novels Jambaka Vijayam, Vaidehi, Padmasundaran and Gouri Mukundan. The four Tamil letters of the title are taken from the names of the four leading characters in this well-written story. Marakatham, Rajeswari, Manjula and Ambuja are each of them excellent examples of ideal Hindu wives; it is difficult to portray four such heroines in one story without blurring their individuality; but **the authoress has accomplished that difficult task**. The character of the two sisters, Ambuja and Maila, both children of a dancing girl, forms a powerful and telling contrast. Ambuja leads an exemplary life and reforms society; it is appropriate that ultimately she marries and settles down as a wife; Maila, on the other hand, is the cause of the downfall of Manivannan the husband of Manjula. **The authoress has a fertile imagination and the plot is full of thrilling incidents and cleverly developed complications. The story is told in an easy style which carries the reader through to the climax and the ultimate denouement; moral lessons are skillfully introduced in the conversations and the monologues. The authoress excels in the depiction of 'Soka Rasa', or the tragic elements of a story and in the depiction of 'man' as the 'weaker vessel.'**

182854

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

நமது தேசம் முன்னேற்ற மடைவதெப்படி?
அதற்காக நமது வியாபாரத்தை செழிப்புறச் செய்வதெப்படி?
வியாபாரக் கணக்குகளை வைக்கும் ஒழுங்கான முறை யாது?

வர்த்தகக் கணித நூல்

அல்லது

தமிழ் புக்-கீபிங்

என்ற நூல் புதிதாக வெளியிடப்பட்டுள்ளது. இப்புஸ்தகத்தில் வியாபார சம்பந்தமான விஷயங்களெல்லாம் நிரம்பவும் நுட்பமாக ஆராய்ச்சி செய்து எழுதப் பெற்றிருக்கின்றன. வியாபாரி ஒவ்வொருவரிடத்திலும் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். அன்றாடம் லாப நஷ்டத்தை ஒவ்வொரு வியாபாரியும் அறிந்துகொள்ள இந்நூல் சொல்லுவதுபோல் கணக்கு வைத்துக்கொண்டால் நிரம்பவும் ஆச்சரியமாகவே உங்களுடைய வியாபாரம் செழிப்பாகும். என்றைக்கு நஷ்டமான காரியமொன்று நடைபெறுகிறதோ அதையுடனே உங்களுடைய மனதிற்குத் தெரிவித்து வரும்படியான சுலபமான முறைகளை இந்நூல் தெளிவாகப் போதிக்கிறது. மேனாட்டாரின் வியாபார ரகசியங்களையும், அவர்கள் எவ்வாறு சுலபமாகவே தம் வியாபாரத் தொழில்களை நடத்திக்கொண்டு செல்லுகிறார்களென்றும் இந்நூல் நன்கு போதிக்கின்றது. இத்தகைய நூல் இதுகாறும் இவ்வளவு தெளிவாகவும் சுத்தமாகவும் தமிழில் வெளி வந்ததே கிடையாது.

புத்தகம் 1-க்கு விலை ரூபா 2—0—0

மிஸ் மேயோ எழுதியுள்ள "இந்தியத்தாய்" என்ற அவதூறு நூலுக்குசரியான மறுப்புநூல் தமிழில் நமது ஆபீஸில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

மாயா மேயோ

அல்லது

மேயோவுக்கு சவுக்கடி.

நேயர்களே! உங்களிடத்தில் தன்மதிப்பு இருக்கிறதா? நம்மைப் பிறர் இகழ நாம் பார்த்துக்கொண்டிருக்கிறதா? அதிலும் அசுத்தக்காரி, வெள்ளைக்காரி மேயோவாம் ஒருத்தி, அவள் சொல்ல நாமும் கேட்கவா? தமிழர்களே! எழுங்கள்! நம்மையும் நம் நாட்டையும் பற்றிய குணாதிசயங்களை உலக மறியச் செய்வது நமது கடமையாகும். இந்த மாயா மேயோ புஸ்தகத்தில் மேயோவுக்கும் பரங்கிகளுக்கும் மற்றுமுள்ள வெள்ளைகளுக்கும் சரியான சவுக்கடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நல்ல தெள்ளிய தமிழில் விநோதமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோஸப் எழுதிய அரிய முகவுரையுடன் கூடியது 416-பக்கம் கைக்கு அழகான புஸ்தகம். விலை ரூபா 2 0 0

வாஸன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.

பரிவெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்து விடலாம். இந்த பாஷையில் வியாபார ரகசியங்களைக் குறித்துக்கொண்டால் இப்பாஷை தெரிந்தவர்கள் தவிற வேறு எவரும் கண்டு கொள்ள முடியாது. ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டு பிறரிடம் சொல்லி கோள் மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வதமிழ் பரிபாஷை. சொற்ப காபிகளே கையிருப்பிலிருக்கின்றன. முந்துங்கள்.

விலை அணு 8.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்,

“ கிருஷிகன் ”

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் “ கிருஷிகனு ”க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

“ கிருஷிகன் ” பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் “ கிருஷிகன் ” ஆபீஸ்,
“ ஜகந்நாதபாக் ” சைதாப்பேட்டை, சென்னை.

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள் ! !

வியாஸங்களை மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மை யடையக் கூடிய விதமாக எழுதப்பட்டுள்ளன

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும்.

நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவை யாவும் செய்யுளாக இருப்பதினால்தான். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ
அன்பு	0	1	போதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம் ...	0	4
இல்லறம்	0	2	பதினறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினன்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்கு கொடுக்கப்படும்

தபால் சார்ஜ் இனம். இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,

122. மங்கமாரி வீதி, இரங்கூன்,

“அறிவு விளக்கம்.”

இது அரியதோர் மாதாந்தப் பத்திரிகை. நீதி விஷயங்கள் நிரம்பப்பெற்றது. அறிவைப் பரவச் செய்யும் அருநிதியெனப் புகழ்மலிந்திலங்குவது. வருட சந்தா 6 அணு

அ. கிருஷ்ணசாமிபிள்ளை, ஆசிரியர் ‘அறிவு விளக்கம்’ உடுமலைப் பேட்டை.

ஆனந்த விகடன்

64பக்கங் கொண்ட மாதப்பத்திரிகை.

சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்தவிகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட" னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்சக் கூடாதா?

வருட சந்தா:—இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட ரூ 1....0....0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1....4....0
மாதிரி காபி இனம்

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி. மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" டெலிபோன் நே. 3311.

வெளிவந்துவிட்டது! 10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

ஆங்கில ஆசான்

(எமது லேடி டி ரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள். போலி புத்தகங்களால் ஏமாறவேண்டாம்.)

60-நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக்கூடியவிதமாய் அப்பியாச பாடங்களாக வகுத்து முன்பதிப்புகளைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களை விட வேறு எந்த புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். நமது முன் பதிப்பு புத்தங்களை வைத்திருப்பவர்கள் கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் அச்சிட்டிருக்கிறது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு செய்தது. விலை. ரூ. 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி மதராஸ்.

4-ம் பதிப்பு

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

முன்னைக் காட்டிலும் அதிகமாக அநேக ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன

விலை ரூபா 2 தான்.



இந்த ஏரோப்ளேன் டிரேட். மார்க் புஸ்தகத்தில் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள். ஏரோப்ளேன் ட்ரேட் மார்க் இல்லாத நூலை நீங்கள் வாங்கினால் நிச்சயம் ஏமாற்றமடைவீர்கள்

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

(1) இல்வாழ்க்கை ஏன் சிறந்தது? (2) பெண்ணின் பெருமை, பெண் கல்வி (3) நாணம் எப்படி உண்டாயிற்று? (4) உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம். (5) நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக் கூடியவள். (6) நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன? (7) இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்? (8) காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம். (9) மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது? (10) கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது? (11) ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது? (12) அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது? (13) சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும் (14) ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன? (15) மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள் (16) கர்ப்பகாலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகள் இவை போன்ற இன்னும் அநேக அரிய விஷயங்களிருக்கின்றன.

இந்நூல் உங்கள் ஊரிலுள்ள புஸ்தகஷாப்பிலிருக்கிறதாவென்று பாருங்கள்; இல்லாவிட்டால் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். ஒரே சமயத்தில் இரண்டு காபிகள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

வாஸன் புத்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "விகடன்" டெலிபோன் 3311

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.
அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கறைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேடு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

22-காரட் ரோல்டு கோல்டு

புது மாடல் கைக் கெடியாரங்கள்



இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக் கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்தரவாதம் ரூபா 4-15-0 வி. பி. வேறு.

ரோல்டு கோல்டு "கோல்டன்" ஹாரங்கள்

இவைகள் பரிசுத்தமான ரோல்டுகோல்டில் தயாரித்து இடையிடையே இமிடேஷன் வைரங்கள் பொதியப்பெற்றது. இருதயபதக்கத்துடன் கூடியது

விலை ரூ. 2



ரோல்டு கோல்டு "சோல்டன்" மோதிரம்

இமிடேஷன் வைரங்கள் பொதியப் பெற்றது. பார்வைக்கு ரூ 100 மதிப்புடையது. விரல்களுக்கு நல்ல அணிகலம்; ஒரு முறை வாங்கியவர்கள் திரும்பவும் வாங்குகிறார்கள்.

விலை ரூ 1—8—0 உடனே எழுதுங்கள்

ஜினன் வாட்சு கம்பெனி, மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

சந்திர மேனகா

By

கமலவாஸன்

ஒரு இனிய தமிழ் நாவல். ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தையும் மயிர்க் கூச்சையும் உண்டாக்கக் கூடியது. படித்துக் கீழே வைக்கும் வரைக்கும் படிப்போர் மனதைக் கவரத்தக்கது. **மதுரவேணி** இறக்கும் தருவாயில் **தாராவதி**க்குப் போதித்த நற்குணங்களும், **புஷ்பாவதி மேனகாவை** அவளுடைய தம்பியையே மணக்கும்படி செய்த சூழ்ச்சிகளும், **சந்திரன்** மேனகாவை அடைவதற்காகப் பட்ட கஷ்டங்களும், தன்னைக் காட்டிக்கொள்ளாமல் தாராவதி மேனகாவுக்குச் செய்த உதவிகளும் ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியவை விலை அணா 8.

விலாஸம்:—எஸ். கே. ஸ்வாமி, 1086 மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

பின் கூறப்படும் இடங்களில் புஸ்தகம் கிடைக்கும்.

1. M. நடன சுந்தரம் Bros, புது மண்டபம், மதுரை.
2. டி. எம். வி. பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி.
3. ஹனுமான் வர்த்தக சாலை, ராயப்பேட்டை, ஹைரோட், மைலாப்பூர் சென்னை.
4. ஏ. வீ. ஸ்ரீனிவாஸ அய்யர், 30 முதல் தெரு, மன்னார்குடி.
5. N. இராமபத்திர அய்யங்கார், மேல மேட்டுத்தெரு கும்பகோணம்.

பிரபல ஜோதிஷர்

பண்டிட் காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

மஹாராஜாக்களாலும், புகழ்பெற்ற பல பெரியோர்களாலும் அனேக தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பரிசு பெற்றவர். ஜாதகம் அல்லது பிறந்த ஹஸ் மீ தேதி டயம் முதலியவற்றை தெரிவித்தால் திரிகால பலன்களையும் மிகத்தெளிவாக அறிவிப்பார். ஒரு ஜாதகம் குறிக்க ரூ. 2. ஜாதகத்தின் திரிகால பலன்களையும் தெசபுக்தியுள்பட நேரில் சொல்வதற்கு ரூ. 5. மேற்படி பலன்களை ஆயுள்வரையில் எழுதுவதற்கு ரூ. 20. ஆரூடம் எதிர் காலத்தைப் பற்றிய கேள்வை 3-க்கு ரூ. 1. மேல் கேள்வை ஒவ்வொன்றிற்கு அணா 8. ஆரூடத்திற்கு லெடர் யெழுதும் டயம் தேவை. ஜாதகத்திர்க்கு பிறந்த டயம் தேவை. மற்ற விவரங்களுக்கு தற்கால விலாசத்திற்கு நேரிலாவது எழுதியாவது தெரிந்துகொள்ளலாம்.

218 "ஸ்ரீநிவாஸ்" தங்கசாலை வீதி, மதறாஸ்.

அமிர்த குணபோதினி

இது போன்ற நவீன மாதாந்த ஸஞ்சிகை இது வரை தமிழில் வெளி வந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும், அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றி சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்ற மடையக் கூடிய வழியையும் போதிப்பதை பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காப்பி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபார்சு இல்லாமல் தாங்களே சந்தாவில் சேர்வீர்களென்பது நிச்சயம். பிரதிமாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூ 1. வெளிநாடு ரூ 1—4—0 மாதிரி காபி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

வெளி வந்து விட்டது!　　　　வெளி வந்து விட்டது!!

1000 கைத்தொழில் முறைகளடங்கிய அருமையான நூல் வெளி வந்து விட்டது.

கைத் தொழில் முறைகள்

இந்நூலில் மாதம் 100 ரூபா முதல் 500 ரூபா வரை சம்பாதிக்கக் கூடிய அரிய போதனைக ளடங்கி யிருக்கின்றன.

இதிலுள்ள சில முக்கியமான தொழில் முறைகள்.

1. சைனா வெள்ளி செய்வது, 2. ஜெர்மன் ஸில்வர் செய்வது, 3. பாய்லர்களில் துருப் பிடிப்பதை நிறுத்த, 4. பித்தளைச் சாமான்களுக்கு வர்ணம் ஏற்ற, 5. மரத்திற்கு பொன்னிற வர்ணம் ஏற்ற, 6. முலாம் கொடுக்கும் பஸ்பங்கள், 7. மெழுகுவர்த்திச் செய்யுமுறை, 8. அலுமினியம் ஒட்டும்சிமெண்டு, 9. வச்சிரம் செய்யும் விதம், 10. ரப்பர் துண்டுகளை ஒட்டும் வச்சிரம், 11. இரும்புப் பொத்தல்களை அடைக்க, 12. உடைந்த சலவைக்கற்களைப்பிணைக்க, 13. செப்புப் பாத்திரங்களைச் சுத்தம் செய்ய, 14. வெள்ளை அல்லது கலர் சாக்குகள் செய்ய, 15. பாணவேடிக்கை மருந்துகள் செய்யு முறை, 16. சிவப்பு, பச்சை, மஞ்சள், பொன் வர்ண பாணங்கள், 17. பூவத்தி கிழிக்கும் காகிதம், 18. கண்ணாடி சுத்தி செய்ய, 19. கண்ணாடியில் பூ வேலைகள் செய்ய, 20. கண்ணாடியில் என்கிரேவ் செய்ய, 21. சகலவித வார்னீஷ்கள் செய்வது, 22. பலவித கறைகளைப் போக்குவது எங்ஙனம், 23. காப்பிக் கொட்டைச் சத்து, நன்னாரிவேர் சத்து, 24. பலவித இங்கிகள் செய்முறை, 25. தீக்குச்சிகள் செய்முறை, 26. தாதுபுஷ்டி லேகியம் செய்வது, 27. அயத் தங்க திராவகம், 28. ஓமத் தைலம், 29. இரகசிய கடிதமெழுதும் இங்கி, ரப்பர் ஸ்டாம்பு இங்கி, 30. விசித்திர வர்ணங்கள் செய்வது, 31. பிரிலியண்டைன், 32. பிரெஞ்சு மயிர் வளருந் தைலம், 33. மயிர் கர்லிங்லோஷன், 34. பலவித சோப்புகள் செய்யும் முறை, 35. திராவகக் கறைகளைப் போக்க, 36. கில்டு நகைகளை சுத்தம் செய்ய, 37. மூட்டுப்பூச்சிக்கு மருந்து 38. கொசு நிவாரணி, 39. தலைமயிர் வளருந் தைலம், 40. நூதன உப்புமாவு செய்முறை, 41. பால்கோவா செய் முறை, 42. பூசினிக்காய் அல்வா, 43. மைசூர் பாக்கு, 44. சென்னை சந்திரகலா சூரியகலா முதலிய இனிப்புப்பதார்த்தங்கள் செய்முறை, 45. பட்டு வஸ்திரங்களில் எண்ணெய் சிக்கெடுக்க, 46. சரிகையின் அழுக்கைப் போக்க, 47. தாம்பிர பஸ்பம் வெள்ளி பஸ்பம் செய்ய, 48. ரசகர்பூர மாத்திரை, 49. அயச் செம்பு, 50. ஜின்ஜர்பீர், இங்கிலீஷ் பீர், 51. எலிக்கடிக்கு எலக்டிரிக் சிகிச்சை, 52. கண்ணாடி சிமெண்டு, 53. துணிகளை மார்கு செய்யும் மை, 54. பிரெஞ்சு பாலீஷ், 55. பலவித பேப்பர் மிண்டுகள் செய்யும் விதம், 56. காலரா, ஆஸ்த்மா, கக்குவானுக்கு மருந்து, 57. சிரங்குக்கு மருந்து, 58. தேள் கடிக்கு மருந்து, 59. தலைமுழுக்குத் தைலம், வெட்டிவேர் தைலம், 60. ரோம சங்காரி செய்யும் விதம், 61. ஜெர்மன் மயிர்கருக்குந் தைலம், 62. தாடிமீசை வளரத் தைலம்; 63. மயிர் சுருட்டையாவதற்குத் தைலம், 64. ஓமம்வாட்டர், 65. பன்னீர் செய்முறை, 66.முகவசீகர பவு

டர், 67. பல்லுக்குப் பேஸ்ட், 68. பலவித பற்பொடிகள், 69. முகவசீகர ஸெண்டு, 70. வாய்நாற்றம் நீங்க, 71. கூந்தல் வளரும் பரிமளத் தைலங்கள், 72. கடைச்சல் பிடிக்கும் போது மரம் வெடித்துப் போகாமலிருக்க, 73. அடுப்பு மூட்ட நெருப்புத் துண்டுகள், 74. சாக்லெட் கிரீம், 75. குதிரைகளின் காயங்களை நீக்க, 76. குதிரைக்கும் மாட்டுக்கும் அநுபோக வைத்தியம், 77. சுலபமாக மீன் பிடிக்கும் விதம், 78. எலிகளை ஒழிக்க, 79. பலவித சிரப்புகள் செய்முறை, 80. வெள்ளையடிக்கும் நூதன முறை, 81. கெட்ட ஜலத்தை சுத்தமாக்கும் நூதன முறை, 82, பாம்புக்கடிக்கு கைகண்ட மருந்து, 83. தேகச்சூடு மேகச்சூட்டிற்கு மருந்து, 84. தலைவலியை ஒரே நிமிஷத்தில் போக்கக் கூடிய அதிசய மருந்து, 85. மூங்கில் செடி உற்பத்தி செய்ய, 86. பலவித பிஸ்கத்துகள் செய்முறை, 87. பலவித மத்தாப்புகள் செய்வது, 88. ஸோடா வாட்டர் செய்முறை. 89. பலவித ஷர்பத்துகள் செய்வது, 90. லெம்ஜூஸ் அண்டுகிளிஸரைன், 91. வெட்டுக் காயத்திற்கு மருந்து, 92. பால் பெருங்காயம் செய்வதெப்படி, 93. இருமலுக்கு மருந்து, 94. தலையில் பூச்சி அரித்து மயிர் விழுவதைத் தடுக்க 95. பூட் பாலீஷ்கள் செய்முறை, 96. கண்ணாடிகளை ஒட்டவைக்க, 97. விளக்குப் புகையாதிருக்க, 98. செடி கொடிகளைத் தின்னும் பூச்சிகளை ஒழிக்க, 99. தோல் சாமான்களை சுத்தம் செய்ய, 100. புட்டிகளை சுத்தம் செய்ய, 101. நகைகளின் அழுக்கை யெடுக்க‘ 102. வைரத்தைச் சுத்தம் செய்ய, 103. ஹார்மோனியம் கீபோர்டு சுத்தம் செய்ய, 104. புத்தகங்களில் இங்கி பட்டால் எடுக்கும் விதம், 105. பீங்கான் ஒட்டும் அதிசயப் பசை, 106. தோல் பதம் செய்ய, 107. தேன் செய்யும் முறை. 108 வாசனைப் புகையிலை, 109. புத்தகங்களுக்குத்தாமே கில்டுபோட, 110. சங்கீதம் பாட குரல் இனிமையாக, 111. அமோனியா ஜலம், 112. கர்ப்ப ஸ்திரீகளுக்கு மருந்து, 113. கண்ணெரிச்சலை தடுக்க, 114. கட்டிகளுக்கு மருந்து, 115. நாபிரணத்திற்கு மருந்து, 116. சுரம் பல்வலி உஷ்ணவாயுவுக்குக்கியாழம், 117. இங்கி அழிக்கும் ரப்பர் செய்வது, 118. காக்கை வலிக்கு பரிகாரம் 119. ஐஸ் செய்யும் முறை, 120. பலவித ஸெண்டுகள் செய்யும் முறைகள்.

நேயர்களே! சில முக்கியமான செய் முறைகள் மட்டும் இவ்விளம்பரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் இதில் இல்லாத ஆயிரக்கணக்கான முறைகள் புஸ்தகத்தில் உண்டு.

ஒவ்வொருவரும் அவரவருக்குத் தகுந்த முறையைச் செய்து பார்த்து வியாபாரம் செய்து ஏராளமாக திரவியம் சம்பாதிக்க வழியுண்டு. இந்நூலில் சொல்லப்பட்டிராத கைத்தொழில் ஒன்றுமே கிடையாது.

முக்கிய குறிப்பு:—இவ்விளம்பரத்தில் சொல்லியிருப்பதைப் போல் புஸ்தகம் எந்த அம்சத்திலாவது மாறு பட்டிருக்கும் பட்சத்தில் எந்தக் காலத்திலும் உங்கள் பணம் வாபீஸ் செய்யப்படும்.

300 பக்கங்களுக்கு மேற்கொண்டகைக்கு அழகான பெரிய நூல் ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது விலை ரூ. 1—8—0

ஏக காலத்தில் இரண்டு புஸ்தகங்கள் வாங்கினால் தபால் செலவு இனும்.

வாலன் புத்தகசாலை,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

15 ரூபாய் இனாம் !

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளால் இயற்றப் பட்ட வைதேகி, பத்மசுந்தரன், ராதாமணி, சண்பக விஜயம், கௌரிமுகுந்தன் ஆகிய 5 புத்தகங்களையும் சேர்த்து தனித்தனியாக 20 கட்டுகள் கட்டி வைக்கப் படும். அவற்றுள் ஒன்றில் 10 ரூபாய் நோட்டு ஒன் றும், மற்றொன்றில் 5 ரூபாய் நோட்டு ஒன்றும் வைக் கப்படும். மேற்படி புத்தகங்களின் விலை 11 ரூபாய் ஆகிறது. ஜகன்மோகினி சந்தா நேயர்களுக்கு மேற் படி கட்டு ஒன்று 8 ரூபாய்க்கும், சந்தாதாரல்லாதவர் களுக்கு 10 ரூபாய்க்கும் கொடுப்பதாகத்தீர்மானித்துள் ளோம். நோட்டுகள் உள்ள கட்டுகள் யார்யாருக்கு சேருகின்றனவோ அவர்கள் அந்த நோட்டின் நெம் பரை தெரிவித்தால் அடுத்த பாதி நோட்டு உடனே அனுப்பப்படும். (பத்திரத்திற்காக பாதி நோட்டாக வைக்கப்படும்.) இந்த நிபந்தனை ஏப்ரல் மாதம் 30-ந் தேதி வரையில்தான் பதினொரு ரூபாய் புத்தகங்களும், 10 அல்லது 5 ரூபாய் நோட்டும் ஒன்றாககிடைக்கும் அதிருஷ்டம் யாருக்குள்ளதோ. 20 கட்டுகளே போட் டியில் வைத்திருப்பதனால் இந்தப் போட்டியில் சேர விரும்புவோர் உடனே மணியார்டர் அனுப்பவும். இந்த ஏற்பாட்டிற்கு வி. பி. யில் அனுப்பமுடியாது. இனாம் பெற்றவர்களின் விபரம் "ஜகன்மோகினியிலும்," "சுதேசமித்திரனிலும்" பிரசுரிக்கப்படும்.

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

P. SHUNMUGAM & CO. MADRAS.

"ஜகன்மோகினி"யில்

வெளிவந்த நாவல்கள்

மலர் I.	ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.				
	கனக சபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு கோதைநாயகி அம்மாள் எழுதியவை.				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
	சண்பக விஜயம் ...	ரூ.	1	12	0
	கௌரீமுகுந்தன் ...	ரூ.	1	12	0

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன் ...	ரூ.	2	0	0
ராதாமணி ...	ரூ.	2	0	0
சண்பக விஜயம்.	ரூ.	1	8	0
கௌரீ முகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதி ராயர்" ராவ் பகதூர் ரஸதுல்லாசாஹிப்" என்னும் இரண்டு நாவல்களும், நான்கணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு அமிருதமாலினியும் அனுப்பப்படும்.

	ரூ.	அ.		ரூ.	அ.
மதன சிங்கர்	1	0	சுந்தர வதனி	0	12
மர்ம முகி	0	12	வஸந்த சமுத்ரம்	0	12
ராஜசேகரன்	0	8	வீரஸிம்ஹன்	0	8

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.